# தமிழரசு

16.12.1996 ரூ.3






# இந்த இதழில் ...


- ☆ உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாடு
  -*முதல்வர் கலைஞர் உரை* ........ 2
- ☆ (அ)ஹிம்சை சிறுகதை ........ 9
- ☆ அறிந்து கொள்வோம் அரசாணையை ........ 17
- ☆ கொடிநாள் செய்தி ........ 19
- ☆ இலக்கியத்தில் இன்பம் ........ 20
- ☆ தமிழக புதிய ஆளுநர் ........ 26
- ☆ அரசு உதவிபெற யாரை அணுக வேண்டும் ........ 27
- ☆ ஆசியாவில் சுற்றுப்புறச் சீரழிவு ........ 28
- ☆ சுவைமிகு தகவல்கள் ........ 30
- ☆ வாசகர் இதயம் ........ 31
- ☆ சமையல் எரிவாயு ........ 32
- ☆ எங்கள் ஊர் பிரச்சினை ........ 33
- ☆ சளி - இருமல் ........ 37
- ☆ செய்திச் சரம் ........ 43
- ☆ வேலைவாய்ப்புச் செய்திகள் ........ 45
- ☆ ஆசிரியர் மடல் ........ 48



## தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027

மார்கழித் திங்கள் : 2

மலர்: 27 இதழ்: 12

16.12.1996

விலை: ரூ. 3




" 1996 மே திங்கள் 13ஆம் நாள் கழக அரசு மீண்டும் பதவிப் பொறுப்பேற்றதும், மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு 23 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த சென்னை மாநகராட்சிக்கும் 10 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த மற்ற அமைப்புகளுக்கும் உள்ளாட்சித் தேர்தலை நடத்திவைத்து, நீண்டகாலமாக நிறைவேற்றப் படாமலிருந்த அரசியலமைப்பையொட்டி பழங்குடியினர் ஆகியோருக்குத் தனித்தனி இட ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் மட்டுமே ஒட்டு மொத்தமாக, ஒரேயடியாக, ஒரே கல கட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பிரமாண்டமான உள்ளாட்சித் தேர்தல் இதில் அராஜகமோ, குழப்பமோ நிகழாமல் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதற்குத் துணை நின்ற தேர்தல்;

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் உரை

**(சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம், சென்னை.)**

ஜனநாயகக் கடமை ஒன்றை நிறைவேற்றி யிருக்கிறது.

இதற்கு முன்பு உள்ளாட்சித் தேர்தல்களை அரசே நடத்தியது. இப்போது இதற்கென்றே முழுச் சுதந்திரம் படைத்த அரசியல் சாசன சட்டப்படி உருவாக்கப்பட்ட மாநிலத் தேர்தல் ஆணையம் நடுநிலையுடன் திறம்படத் தேர்தலை நடத்தியிருக்கின்றது. இத்தேர்தலில் பெண்க ளுக்கு மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையா இடஒதுக்கீடும், தாழ்த்தப்பட்டோர், ஆணையர், காவல்துறையினர், அரசு அலு வலர்கள், உள்ளாட்சித்துறையினர், வாக்காளப் பெருமக்கள் மற்றும் அனைத்துக் கட்சி யினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் வெற்றிபெற்றுள்ளவர்களுக்கு இதயமார்ந்த வாழ்த்துக்களையும் வழங்கி வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் 95,657 கிராம ஊராட்சி உறுப்பினர்களும், 12,584 கிராம ஊராட்சித் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை 6,501 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களும், 382 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் பதவியேற்றுள்ளனர்.

தமிழகத்தில் 28 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், 649 மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்வு பெற்றனர். அதுபோல 634 பேரூராட்சித் தலைவர்களும், 10,170 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நகராட்சிகளைப் பொறுத்தவரை 102 நகராட்சிகளுக்குத் தலைவர்களும் 3,392 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஊராட்சிகளைப் பொறுத்தவரை தலைவர் பதவிக்கு, 3,197 இடங்கள் பெண்களுக்கென வும் (பொது), 1,101 இடங்கள் ஆதிதிராவிடப் பெண்களுக்கெனவும், 25 இடங்கள் பழங் குடியினர் பெண்களுக்கெனவும், ஆதிதிராவிடர் களுக்கென 1,851 இடங்களும் பழங்குடி யினர்க்கென 60 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை தலைவர் பதவிக்கான 384 இடங்களில் ஆதிதிராவிட இனத்திற்கு 43 இடங்களும், அந்த இனப் பெண்களுக்கு 32 இடங்களும், பொதுப் பிரிவில் 202 இடங்களும், பெண் களுக்கு 107 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

இதுபோலவே மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பதவி நிலையில் ஆதிதிராவிடப் பெண்களுக்கு இரண்டு இடங்களும், பொதுப்பிரிவில் பெண்களுக்கு எட்டு இடங்களும் ஒதுக்கப்பட்டன. மாவட்ட ஊராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலை வர்களும், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளனர். மற்ற அனைத்திற்கும் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.


தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் என ஆறு மாநகராட்சிகள் உள்ளன. இவற்றிற்கு 6 மேயர்களும், 474 உறுப்பினர்களும் நேரடி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


அவர்களில் ஒருவராக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்தலில் வெற்றி வாகை சூடி இந்த சிறப்புமிக்க மாநாட்டில் வீற்றிருக்கும் வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். கடந்த 25.10.1996 அன்று பதவிப் பொறுப்பேற்ற நீங்கள் அனைவரும் உங்கள் பகுதியின் வளர்ச்சியில் முழு மூச்சுடன் கடமையாற்றத் தொடங்கி யிருப்பீர்கள் என நினைக்கிறேன. இதன் மூலம் கிராம, நகரப் பகுதிகளில் மக்கள் பிரதிநிதி களின் ஆட்சி மீண்டும் தொடங்கிவிட்டது என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட்டு விட்டது.

மக்களாட்சி முறை என்பது குறிப்பாக தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களில்- சிற்றூர்களில்- பேரூர்களில்- நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே அரும்புவிட்ட ஒன்றாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊராட்சி முறை வகுத்து, மக்களாட்சிக்கு வழிகாட்டிய பெருமை தமிழ் மன்னர்களான மூவேந்தர் களை மட்டுமே சாரும். இவர்கள் ஆட்சியில் ஊராட்சி சிறந்து விளங்கிய செய்திகளை கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், வரலாற்றுச் சான்றுகள் மூலமாக அறியலாம். அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் கிராமத் திலுள்ள வைகுண்ட பெருமாள் கோவில் மதில்சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன.

முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் கி.பி. 921-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கிராம சபைகள் மிகவும் தெளிவாகவும்,





திறமையாகவும் செயல்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் பல குக்கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குக்கிராமமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் குடவோலை மூலம் உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட விவரம் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்களின் அறிவு, ஆற்றல், தொண்டுள்ளம், தூய ஒழுக்கம் இவற்றைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்த பின்னரே நிற்பதற்கே அனுமதிக்கப்பட்டனர் என்றால்; அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் எத்துணைக் கண்டிப்பு இருந்திருக்கும் என்பதை எளிதில் உணர முடியும். இந்தக் கிராம குடியரசுகள் நல்ல முறையில் வளர்ந்து சீராகச் செயலாற்றி, சமுதாயத்திற்குப் பேருதவிகள் பல புரிந்துள்ளன.

இந்தக் குடவோலை முறை சங்கக் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதற்கு சங்க காலப் பாடல்கள் சான்றாக விளங்கு கின்றன. போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்ற வீரர்களின் சடலங்களை, கழுகுகளும், காக்கைகளும், நரிகளும், நாய்களும் தின்று கொண்டிருக்கிற காட்சியை மருதன் இளநாகனார் எனும் புலவர் காண்கிறார். காணும்போது ஒரு கழுகு ஒரு வீரனுடைய வயிற்றினைத் தன்னுடைய கூர்மையான அலகினால் கிழித்து, அவன் குடலை உருவிக் கொண்டிருப்பதைப் பற்றி அந்தப் புலவர் பாடுகிறார். இறந்து கிடக்கும் வீரனுடையக் குடலை, கழுகு உருவுவது எப்படியிருக் கிறதென்றால், கிராமப்புறங்களிலே குட வோலை முறையில் குடந்திற்குள் போடப்பட்ட ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்பதைப்போல் இருக்கின்றது என்று அந்தப் புலவர் எழுதுகிறார்.

எனவே சங்க காலமே, மக்களாட்சி மாண்புக்கு அடியெத்துக் கொடுத்த தங்க காலமாக இருந்திருக்கின்றது.


தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்த ஊராட்சி முறைகள், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது உருமாறின. 1882-ஆம் ஆண்டு, வைஸ் ராயாக இருந்த ரிப்பன் பிரபு, இந்தியாவில், ஊராட்சிகளுக்குச் சட்ட வடிவம் கொடுக்க விரும்பினார். அதற்கிணங்க, 1884-இல் சென்னை மாகாணத்திலும், 1885-இல் வங்காள மாகாணத்திலும், ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. ரிப்பன்பிரபு காலத்தில் லோக்கல் போர்டு (உள்ளாட்சி) சட்டம் இயற்றப்பட்டு, ஜில்லா போர்டு, தாலுகா போர்டு மற்றும் யூனியன்கள் அமைக்கப்பட்டன. சாலைகளில் விளக்குப் போடுவது, ஊர்ச் சுகாதாரம், மருத்துவமனைகள், பள்ளிகள் அமைப்பது, கால்நடைகளையும், சாலைகளை யும் பராமரிப்பது போன்ற பணிகளை இந்த ஊராட்சிகள் கவனித்து வந்தன. இச்சட்டங்கள் சரிவர இயங்காத நிலை ஏற்பட்டது. அதுமட்டுமில்லாமல், நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர்களின் அமைப்புகள், அதிகாரிகள் ஆதிக்கக் கூட்டங்களாகவே இருந்தன. ஒரு கிராமத்திற்கு ஒரு ஊராட்சி என்ற அடிப் படையில் இந்த அமைப்புகள் உருவாக்கப் படவில்லை.

இந்தச் சீர்கேட்டைச் சரி செய்ய அமைக்கப் பட்ட "ராயர்கமிஷன்" கிராமங்களில் ஊராட்சி களை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டது. அதன் அடிப்படையில் 1920-ஆம் ஆண்டு,

கிராமப் பஞ்சாயத்துகள் சட்டம் இயற்றப் பட்டது. மத்திய அரசின் பரிந்துரைகள் புறக்கணிக்கப் பட்டு, மேல்தளத்தில் இருந்த ஜில்லா போர்டுகளின் மேற்பார்வையிலேயே பஞ்சாயத் துக்கள் இயங்கின. 1884-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட லோக்கல் போர்டு சட்டத்தின் வாரிசாக 1920-ல் சென்னை லோக்கல் போர்டுகளின் சட்டம் இயற்றப்பட்டு, இரண்டு சட்டங்களும் ஒன்றாக இயங்கி வந்தன.

1930-ஆம் ஆண்டில் சென்னை லோக்கல் போர்டுகள் சட்டம் திருத்தப்பட்டது. 1946-இல் ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்படி கடந்த காலத்திலே ஆங்கிலேய அரசு எடுத்த முயற்சிகள் பெரும்பாலும் கண்துடைப் பாகவே இருந்தன. அதிகாரம், வருமானம், கவனிப்பு ஆகியவை இல்லாததால் ஊராட்சிகள் ஆட்சிமுறை சரிவர அமைய வில்லை. நாடு சுதந்திரம் அடைந்ததும், ஊராட்சி அமைப்பு முறை, அனைத்து மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக அமைய வேண்டுமென்ற நோக்கத்துடன், 1950-ஆம் ஆண்டு சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும், பொதுச் சுகாதாரம் போன்ற சில பொதுக்காரியங்களை, ஜில்லாபோர்டுகள் தொடர்ந்து கவனித்து வந்தன. இதன் காரணமாக அவ்வப்போது சிக்கல்கள் தோன்றிக்கொண்டே இருந்தன.

1919-ஆம் ஆண்டு வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயர் சென்னை மாநகராட்சி யின் தலைவராக (பிரசிடெண்ட்) நியமிக்கப் பட்டு, மாநகராட்சி, சென்னை நகர மக்களின் சேவைக்காக முதல் அடியெடுத்து வைத்தது. 4 ஆண்டுகள் பணியாற்றிய அவருக்குப் பின் 10 பேர் அதே பொறுப்பை வகித்துள்ளனர்.



1934-ஆம் ஆண்டு தலைவர் (பிரசிடெண்ட்) ஆட்சிமுறையை மாற்றி மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெரும் பான்மை வாக்குகளைப் பெற்றவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் கட்டுப்பாட்டில் மாநகராட்சி இயங்கத் தொடங்கியது. அவ்விதம் சென்னை மாநகராட்சியின் முதன் மேயராக இருந்த பெருமையை இராஜா சர்.முத்தையா செட்டியார் பெற்றார்.

அவருக்குப்பின் 42 பேர் நகரின் மேயராக இருந்து பணியாற்றியுள்ளனர். கடைசி மேயராக திரு ஆர். ஆறுமுகம் 1972-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் எல்லாம் நேரடியாக மக்களால் தேர்ந்ததெடுக்கப் பட்டவர்கள் அல்லர். ஓராண்டு காலத்திற்கு மட்டுமே இந்தப் பதவியை வகித்தனர். இப்போதுதான் முதன் முறையாக ஆறு மாநகராட்சிகளில் மேயர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மற்ற உள்ளாட்சித் தலைவர்களைப் போல ஐந்தாண்டுக் காலத்திற்குப் பதவி வகிக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாட்டில் இரண்டாவது மாநகராட்சி என்ற பெருமையை பெற்றது மதுரை மாநகராட்சி. லெவிங்ஸ் என்ற ஆங்கிலேயக் கலெக்டர் 1866-இல் மதுரையில் சிட்டி கவுன்சில் என்ற ஒன்றை அமைத்து அதற்குத் தலைவராக இருந்தார். அந்தக் கவுன்சிலில் நான்கு உறுப்பினர்கள் இருந்தனர். சிட்டி கவுன்சில் முறை 1882-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

அதன்பிறகு சிட்டி கவுன்சில் என்பது முனிசிபல் கவுன்சில் ஆனது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எட்டு பேரும், நியமன உறுப்பினர்களாக ஆறு பேரும் இருந்தனர். மதுரை நகர சபையின் முதல் தலைவராக திரு இராம சுப்பையர் தேர்ந் தெடுக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து திரு அப்பாசாமி நாயுடு தலைவரானார்.

1921-ஆம் ஆண்டு முனிசிபாலிட்டி சட்டம் அமலுக்கு வந்தபோது நகரசபை கவுன்சிலர்

களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 27 பேர் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஒன்பது பேர் நியமன உறுப்பினர் களாக இருந்தனர். நகர்மன்றத் தலைவருக்கு சம்பளம் வழங்க வகை செய்த முனிசிபாலிட்டி சட்டம் இது.

1931-ஆம் ஆண்டில் நகரசபை கவுன்சில் கலைக்கப்பட்டு, 1933-ஆம் ஆண்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது.

பின்னர் 1.5.1971 அன்று மதுரை, மாநகராட்சி என்ற தகுதியைப் பெற்று முதல் மேயராக எஸ்.முத்து பொறுப்பேற்றார்.

சென்னை, மதுரை மாநகராட்சிகளை யன்னியில் இப்போது புதிதாக கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு மாநகராட்சிகள் உள்ளன.

கிராமங்கள் சமுதாய நலத்திட்ட வேலை களை, மக்கள் அமைப்புடன் இணைந்து செயல்படுத்தினால், அது பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதி மாநில அரசுகள், அதற்கேற்றவாறு, ஊராட்சிகள் சட்டம் உருவாக்குவதை ஆராய்ந்து பரிந்துரை செய்ய காந்தியவாதியும், நிர்மாணத் திட்டங்களில் ஈடுபாடு உள்ளவருமான திரு பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையில் மத்திய அரசு ஒரு குழுவை 1957-ஆம் ஆண்டு நியமித்தது. அந்தக் குழுவானது, மாநில அரசுகளுக்கு மூன்றடுக்குத் திட்டம் ஒன்றைப் பரிந்துரை செய்தது. அதன்படி, மாவட்ட அளவில் ஒரு அமைப்பும், கிராம அளவில் ஒரு அமைப்பும், இதற்கிடையில் இணைப்பாக ஒரு அமைப்பும் அமைப்பதுதான் அத்திட்டத்தின் நோக்கம். அதன் அடிப்படையில் 1958-இல் பெருந் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி என்ற மூன்று அமைப்புகள் உருவாக சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

காலத்தின் தேவைகள் மற்றும் இந்திய மக்களிடையே தோன்றிய விழிப்புணர்வின் காரணமாக ஊரக முன்னேற்றத்தை அடிப் படையாகக் கொண்டு உருவாக்கப்படும் பயன்கள், அடித்தளத்து மக்களை மேலும் தாமதமின்றிச் சென்றடைய வேண்டும் என்றும், அவர்களையும் திட்டப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் ஒரு கருத்து உருவானது. அதன் வெளிப்பாடாக இந்தியப் பாராளுமன்றம், இந்திய அரசியல் சட்டத்திற்கு 1992-ஆம் ஆண்டு திருத்தங்களை கொண்டு வந்தது. இவையே 73-வது மற்றும் 74-வது இந்திய அரசியல் சட்டத் திருத்தங்களாகும். இதனால் கடந்த 46 ஆண்டுகளாக மாநிலப் பட்டியலில் இருந்து வந்த பஞ்சாயத்து நிர்வாகம், மத்திய அரசின் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அதன்படி பஞ்சாயத்து முறை இந்தியா முழுவதும், கிராமப் பஞ்சாயத்து, மாவட்டப் பஞ்சாயத்து மற்றும் இடையில் ஒன்றியம் போன்ற ஓர் அமைப்பு என்ற மூன்று மட்டங்களைக் கொண்டதாக இருக்கும். இதனால், கிராமப்புற மக்களைச் சுயாட்சி அமைப்புகளில் ஈடுபடுத்தி, அந்த அமைப்பு களை முன்நடத்திச் செல்பவர்களாக உரு. வாக்க முடியும் என்றும், இது மக்களாட்சித் தத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் அரசு கருதியது.

இதனைத் தொடர்ந்து 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் மற்றும் அனைத்து மாநகராட்சிச் சட்டம் திருத்தப்பட்டது.

ஏற்கெனவே இருந்த முறையில், ஊராட்சி களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தது. அவை ஒன்றையொன்று சார்ந்திருந்தன. ஊராட்சி ஒன்றிய எல்லைக் குள் இருக்கும் அனைத்து ஊராட்சிகளும் சேர்ந்து ஊராட்சி ஒன்றியமாக இருந்தது. ஆனால் இந்த மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இந்தத் தொடர்பு இல்லை. ஒவ்வொரு அமைப்பும் தனியே இயங்கும் தன்மை கொண்டதாக அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சிச் சாலைகளை அமைத்தல், சாலைகளில் விளக்கு வசதி செய்தல், வடிகால்

களை அமைத்தல், வடிகால் நீர் மாசுக்களை அகற்றுதல், தெருக்கள் துப்புரவு, பொதுக் கழிப்பிடங்களில் வசதி, இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் ஏற்படுத்துதல், கிணறு, குட்டைகள், குளங்கள் தோண்டுதல் போன்ற வையும், அவற்றைப் பராமரித்தலும், தமிழகத் திலுள்ள 12,584 ஊராட்சி மன்றங்களின் பல்வேறு பணிகளில் ஒரு பகுதியாகும்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் அவை மீதான சிறுபாலங்கள், அணைகள், தரைப்பாலங்கள் கட்டுதல், பழுதுபார்த்தல், மருத்துவமனைகளை நிறுவுதல், ஏழை களுக்கான வீடுகள், அனாதை இல்லங்கள், கடைகள், விற்பனைச் சாவடிகள் கட்டுமானம் செய்தல், வீட்டுமனை வழங்குதல், போன்ற வையும் அவற்றின் பராமரிப்பும் 384 ஊராட்சி ஒன்றிய அலுவல்களில் ஒரு பகுதியாகும்.

பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டத்தைத் தயாரித்தல், மாவட்ட அளவில் நிறைவேற்றக் கூடிய மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை ஒருங்கிணைத்தல், மாவட்ட அளவில் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைக் கண் காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் போன்றவை 28 மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பாகும்.


மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில், மாவட்ட ஊராட்சிகள் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு அளிக்கப் பட்ட உரிமைகளில், ஆலோசனைகூறும் உரிமைகளே பெரும்பாலும் உள்ளன. ஆனால், மேலும் என்னென்ன உரிமைகளை - படிப் படியாக மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்குவது என அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

இந்திய அரசியலமைப்பு (73வது திருத்த) சட்டத்திற்கிணங்க, மாநில நிதிக் குழு ஒன்று 1994-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலை யினை ஆராய்ந்து, நிதி ஆதாரங்களை அதிகரிக்கப் பரிந்துரைத்தல், மாநிலத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே அரசால் விதிக்கப்படும் வரிகள், சுங்கம், கட்டணங்கள் ஆகியவற்றில் இருக்கும் நிகர வருமானத்தைப் பிரித்துக் கொள்வதில் கடைப்பிடிக்கக்கூடிய கொள்கைகளை வகுத்தல், அந்த வருமானத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கானக் கொள்கைகளை வகுத்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைச் செய்ய வேண்டிய வரிகள், சுங்கம், கட்டணங்களை நிர்ண யித்தல், மானியம் அளிப்பதற்கான கொள்கை களை வகுத்தல் போன்றவை இக்குழுவிற்கு வரையறுக்கப்பட்டப் பணிகளாகும்.

இயற்றப்பட்டச் சட்டமும், அதன் அடிப் படையில் அமைந்திடும் மாநில நிதிக்குழு போன்றவையும் இயங்காமல் இருக்கக்கூடிய நிலையை மாற்றி, அவற்றை இயங்க வைக்கும் வகையில்தான், இந்த அரசு பொறுப்பேற்ற வுடன் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பல்வேறு நிலைகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புப் பொறுப்புகளை ஒப்படைச்



செய்யவும், அவ்வாறு ஒப்படை செய்ய விருக்கிறப் பொறுப்புகள் சம்பந்தமாக, உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு, கடமைகள் மற்றும் அலுவலர்கள் பற்றி, ஆய்வு செய்து பரிந்துரைக்க அரசு ஒரு குழுவை, மாநிலத் திட்டக் குழுவின் கீழ் அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளை ஒரு மாதத் திற்குள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட ஊராட்சியும், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 240-வது பிரிவின்படி, ஆண்டுதோறும் வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். மாவட்ட திட்டக்குழு ஒன்றை

அமைக்கவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அக்குழு, உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சியில் தயாரிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்கும் ஒரு வரைவு வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், செயல்படுத்துவதிலும், ஊராட்சி நிறுவனங்கள் கணிசமான பங்கை வகிக்கும்.

பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.60 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினைக் கொண்டு உள்ளாட்சி நிறுவனங்கள், மக்களுக்குப் பயன்படக்கூடிய சமூகச் சொத்துக்களை உருவாக்க முடியும்.

1996-97-ஆம் ஆண்டிற்கு, பத்தாவது நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட மானியத்தை ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொள்ள ரூ.15 இலட்சம் வரை செலவு செய்யலாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சிகள், அவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 5 சதவிகிதத்தினை நிர்வாகத்திற்காகச் செலவிடலாம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், மாவட்ட ஊராட்சியின் முதன்மைச் செயல் அலுவலராக இருப்பார். ஊராட்சி ஒன்றிய பொது நிதியை குடிநீர் விநியோகம், பள்ளிக் கட்டடங்கள், சாலைப்பணிகள் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் ஆகியவைகளுக்குச் செலவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு செலவிடும் முன்னர், குறைந்தபட்சம் ரூ.5 இலட்சம் பொதுநிதியின் இருப்பில் வைக்க வேண்டும். ஊராட்சியின் தலைவர் ஊராட்சியின் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் செயல் அலுவலருக்கான அதிகாரங்கள் மற்றும் அலுவல்களைச் செய்யலாம். எங்கெல்லாம் ஊராட்சி உதவியாளர் இல்லையோ, அங்கெல்லாம் பகுதி நேர எழுத்தர்கள் நியமிக்கப்படலாம். ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள் ஊராட்சித் தலைவர் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

நடப்பாண்டில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டம், மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த, மத்திய உதவியுடன் மாநில அரசு, ரூ.1,273.17 கோடி நிதி வழங்கியுள்ளது.

இந்த நிதியில் நடப்பாண்டில் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள், வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் கட்டித்தரப்படும். மேலும், மொத்தம் ஐயாயிரம் கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்படும். சதுப்பு நிலங்களில் இருபது குடியிருப்புகள் இருந்தால், அவை பக்கத்தில் உள்ள சாலையுடன் இணைக்கப்படும். அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளிலும் குடிநீர் வசதி செய்து தரப்படும். சமூகக் காடுகள் திட்டம் சீரமைக்கப்படும். 1.8.1996 முதல் தெரு விளக்கு பராமரிப்பு, மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதன் முறையாக நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பேரூராட்சி மற்றும் நகராட்சிகளுக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.9.15 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 41 ஆம் பக்கம்

# (அ)ஹிம்சை

**சோ. தர்மன்**

**(1994 ஆம் ஆண்டில் வெளிவந்த இக்கதை 'இலக்கியச் சிந்தனை' அமைப்பால் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.)**

**அ**ய்யா வீட்டு வாசல்படியை மிதித்த உடனேயே அவர் முகத்தில் குறுஞ்சிரிப்பாணி பொத்துக்கொண்டு வந்தது. இரண்டு உதடுகளையும் கடித்து நமட்டிக் கொண் டாலும்கூட முகம் பிரகாசமாயிருந்தது. இப்படி அவர் முகத்தைப் பார்ப்பதே அபூர் வம். இப்படி அவர் முகம் மாறியிருக்கிற தென்றால் அவருக்குப் பிடித்தமான ஏதோ ஒரு சந்தோஷம் இருக்கும் என்று மூத்த வனுக்குத் தெரியும்.

"என்னய்யா, காட்லருந்து வரும்போதே சந்தோஷம் பிச்சுக்கிட்டுப் போகுது."

"......"

அவன் கேள்வியை அவர் காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. காட்டிலிருந்து மேய்ந்துவிட்டு வந்த ஆடு களுக்குத் தண்ணீர் வைக்க சருவச்சட்டியுடன் முற்றத்திற்கு வந்த அம்மா சொன்னாள், "கரிசக்காட்ல ஏதாவது கெடாரம் கெடச்சிருக் கும். ஓங்கப்பன் தெரட்டிட்டு வந்திருப்பான். போயி வாங்கி ரெங்குப் பெட்டிக்குள்ள வச்சுபூட்டு."

அய்யா செருப்பு இரண்டையும் கழற்றி மூலையில் எறிந்தார். தொரட்டிக் கம்பை பனங்கட்டையில் தொங்கப்போட்டார். துண்டில் சுற்றி வைத்திருந்த பொட்டலத்தை மெதுவாய் அவிழ்த்தார். ஆவரை இலை களுக்கு மத்தியில் அழகாய் ஒரு கிளிக்குஞ்சி. சரியாய் ரோமம் கூட முளைக்காத பொட்டுக் கண்களுடன், சிவப்பாய் முந்திரிப் பருப்பு அலகுடன் நண்டுக் கால்களுடன் நடுங்கிக் கொண்டு நின்றது. அதன்மேல் ஒட்டியிருந்த ஆவரை இலைகளையெல்லாம் ஊதிவிட்டார். பார்த்த உடனேயே அம்மா கடுப்பாகிப் போனாள். "சனியனே இத எதுக்கு கொண்டாந்தே? மைனா ரெண்டாப் போச்சு. இனி கிளிய வளர்த்து மூணா போகப் போகுதாக்கும்".

அவர் எதையும் சட்டை செய்யவில்லை. கிளிக்குஞ்சியை ஊதிவிடவும் சிரிக்கவுமாக இருந்தார். அம்மா ஆடுகளுக்குத் தண்ணீர் வைத்துவிட்டுப் புலம்பிக் கொண்டே வீட்டுக் குள் போனாள். மூத்தவன் ஒவ்வொன்றாய் பிடித்து முளைக்குச்சியில் கட்டினான்.



**"கரிசக்காட்ல ஏதாவது கெடாரம் கெடச்சிருக்கும். ஓங்கப்பன் தெரட்டிட்டு வந்திருப்பான். போயி வாங்கி ரெங்குப் பெட்டிக்குள்ள வச்சுபூட்டு."**

போன வருசமும் இதேபோல்தான் ஒருநாள் சின்னஞ்சிறிய மைனாக்குஞ்சியுடன் வந்தார். புட்டாணிகூட தெறிக்காத அந்தப் பச்ச மண்ணு காதுவரை வாயை வைத்துக் கொண்டு வளர்ந்த காதுகளை 'ட'னாவைப் போல் மடக்கி வைத்துக்கொண்டு நடுங்கிக் கொண்டே நின்றது. அன்றைக்கும் அவர் யார் பேச்சையும் சட்டை செய்யவில்லை. ஒரு கூடு செய்து, அந்தக் கூட்டிற்குள் அது நிற்பதாக ஒரு குச்சி செதுக்கி குறுக்காய் கட்டி, ஒரு சின்ன ஈயக் கிண்ணம் தயார் பண்ணி அதையும் கூட்டிற்குள் வைத்துக் கட்டி உள்ளே அடைத்தார்.

விடிந்தவுடன் அவர் முதலில் பார்ப்பது- அந்தக் கூட்டைத்தான். அடுத்துதான் ஆடுகள் கட்டியிருக்கும் பக்கம் எட்டிப் பார்ப்பார். நாளாக நாளாக எல்லோருக்கும் அது பிடித்துப் போயிற்று. மினுமினுவென்று அதன் உடம்பெல்லாம் மின்னும் காப்பி கலர் ரோமமும், கழுத்தில் வட்டமாய் கோடு போட்டது மாதிரியான வெள்ளையும் பார்க்க அழகாய் இருந்தது. வாரம் இரண்டு தடவை மெனக்கெட்டு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டி விடுவார். ஈரம் எல்லாம் உலரும் வரை வெயில் தேடிப்போய் நின்றுகொண்டு மணிக்கணக்காய் காவல் இருப்பார். அது உடம்பை கால்மாற்றி கால்மாற்றி கோதிக் கோதி உரோமத்தை சிலித்துக் கொண்டு நிற்பதை கண்கொட்டாமல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பார். இடது கை ஆட்காட்டி விரலை நீட்டி அதில் உட்கார வைத்து வலது கையால் முதுகைத் தடவிக்கொண்டே வந்து கூட்டுக்குள் விடுவார்.

"யேல...ஊர் ஆடு பூராவும் மேயப் போயிடுச்சு. ஒங்கப்பனைப் பாரு, மயினாவுக்கு ஒவினியம் பாத்திட்டு இருக்கிறத."

"யேல, பெரியவன...ஆராய்ச்சும் கோயில்பட்டி போனா மறந்திராம ஒரு பழுத்த கொய்யாப்பழம் வாங்கியாரச் சொல்லிருடா."

அவிழ்த்துவிட்ட ஆடுகள் பாதையை விட்டு விலகி ஓட, ஒரு லொக்கோட்டம் ஓடி ஆடுகளை அதட்டி ஒன்று சேர்ப்பார். சாயங்காலம் வந்தவுடன் ஆடுகளைக் கூட கட்டமாட்டார்.

'யேய்... மணி அய்யாவுக்கு ஒரு முத்தம் கொடு.' ரோமத்தை நீக்கி இரைப்பையை ஊதிப் பார்ப்பார். வயிறு குறையாயிருந்தால் மாரியம்மவை முறைப்பார். இப்போது மணி சாதாரணமாக வெளியில் நடமாடும். கூரையின் மேல், வீட்டு முற்றத்தில் உள்ள வேப்பமரத்தில் என்று அதுபாட்டுக்குச் சுற்றித் திரிந்தது. மற்ற மைனாக்களிலிருந்து வித்தியாசம் காட்டுவது அதன் காலில் கட்டியிருந்த ஒற்றைச் சலங்கைதான். அது பறக்கும்போதும் தாவித் தாவி உட்காரும் போதும் சிலுக் சிலுக் என்ற சத்தம் கேட்டவுடன் வெற்றிலை எச்சில் கடவாயில்



ஒழுக அண்ணாந்து கொண்டு சிரிப்பார்.

அன்று சாயங்காலம் அய்யா எப்படியோ மாறிப் போனார். மணி இன்னும் வீடு திரும்பவில்லை. கூரைகளிலும், மரங்களிலும் ஓடி ஓடித் தேடினார். மூத்தவனைக் கூப்பிட்டு அதட்டினார்.

“மைனா செத்துப்போச்சாம். நீய்யும் போயி செத்துப்போ.”

அம்மாவுக்கு செம்மையான அடி விழுந்தது. அய்யா கூப்பாடு எட்டு வீட்டுக்குக் கேட்கும். அய்யா பரக்கப் பரக்க ஓடிக்கொண்டிருந்தார். இருட்டியபின் ரொம்ப நேரங் கழித்து வேப்பமரத்தின் தாடிக்கொப்பில் சில்க் என்ற சத்தம். தொழுவத்தில் உட்கார்ந்து முழித்துக் கொண்டிருந்த அய்யா வேகமாக ஓடி வந்தார். மணி அவர் தோளில் உட்கார்ந்து கொண்டது. கூட்டுக்குள் அதைத்துவிட்டுப் பானை . சட்டியை எல்லாம் உருட்டினார். பழைய சோறு கொண்டுபோய் கிண்ணத்தில் வைத்துவிட்டு பெட்டியைத் திறந்து கொஞ்சம் சேவு எடுத்துக் கூட்டுக்குள் போட்டுவிட்டுப் படுத்தார்.

விடிந்தபோது அய்யா விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தார். முற்றம் தெளிக்கப் போன அம்மா பதறிப் போய் மூத்தவனை எழுப்பிவிட்டாள். மூத்தவன் போய் கூட்டை எட்டிப் பார்த்தான். மணி படுத்தப் படுக்கையாய் செத்து விறைத்துக் கிடந்தது. அதன் வாயினுள் ஒரு நீள சேவு குத்தியபடி பாதி வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. ஈரக்கையுடன் நின்ற அம்மாவின் கண் களிலும் கண்ணீர் திரண்டது. சேலை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். கூட்டுக்குள் கையை விட்டு வெளியே எடுத்த மூத்தவனின் கைகளில் எறும்புகள் ஊர்ந்தன. அய்யாவை ஏறிட்டுப் பார்த்தான். அவர் குத்துகாலிட்டு மூலையில் உட்கார்ந்தபடியே பரிதாபமாய் ஏறிட்டுப் பார்த்தார். அவர் கண்கள் சிவந்திருந்தன.

“தூரப் போட்ரட்டாயா?”

அன்றும் பேசாமல் எழுந்துகொண்டவர் சுவரோரம் கிடந்த மண்வெட்டியை எடுத்துக் கொண்டு மைனாவையும் வாங்கிக்கொண்டு ரோட்டில் நடந்தார். முழுகி துண்டைக் காயப்போட்டுக்கொண்டு வந்தார். அன்றைக்கு ஆடு மேய்க்க மூத்தவன் போக வேண்டிய தாயிற்று. வீடே வெறிச்சென்றிருந்தது. அம்மா வாசல் படியில் உட்கார்ந்து சுளகில் ஏதோ புடைத்துக் கொண்டிருந்தாள். மூலையில் உட்கார்ந்து அய்யா அந்த மைனாக் கூட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“மாரியம்மா... யேய் மாரியம்மா...”

“மாரியம்மாளுக்கு என்ன வச்சிருக்க?”

“இந்த தை வந்தா நான் போலீஸ் ஸ்டேசன் போய்விட்டு வந்து எட்டு வருசம் ஆகுது.”

அம்மாவின் மடியில் இருந்த சுளகில் கண்ணீர் உருளும்.

அவர் போலீஸ் ஸ்டேசன் போய்விட்டு நடைப் பிணமாய் வந்ததை நினைத்தால்



**“பெத்த புள்ளைய எவனாவது வெலைக்கு விப்பானா?” அது மாதிரி இதுவும் ஒரு புள்ளடா, நான் இத கிளியா வளக்கலேடா, இது எம் புள்ளடா. போடா எச்சிகல நாயே.”**

உடனே அழுகை வரும். இரு கால்களும் நொறுக்கப்பட்டு நகங்கள் பிடுங்கி யெறியப்பட்டு மீசை உரோமத்தையெல்லாம் கையாலேயே பிடுங்கி, விதைக்கொட்டைகள் வீங்கி ஒண்ணுக்கிருக்க முடியாமல், ஒரு சொட்டு மூத்திரம்விட அவர் போட்ட கூப்பாடு. அம்மா அழுதுகொண்டே எழுந்து போனாள். அவர் சுகமாகி நடமாடிய போதுதான் அந்த மாற்றம் தெரிந்தது. முந்தி இருந்த அய்யாவே இல்லை.

சிரட்டையில் கங்குகளை நிறைய அள்ளி வைத்துக்கொண்டு ஆடுகளின் தோல்களை ஒட்டிக்கொண்டிருக்கும் உண்ணிகளைப் பிடுங்கிப் பிடுங்கி சிரட்டையில் போடுவார். தீக்கங்கில்உப்பி டப்பென்று வெடித்துப் பிணவாடை வரும். அய்யா பலமாகச் சிரிப்பார். ஆடுகளை விரட்டும் கிடாயைக். காய அடிக்கும்போது, இரண்டு குச்சிகளால் தொங்கும். அதன் விறைகளை இடுக்கிப் பிடித்து நசுக்குவார். அது போடுகிற கூப்பாடு ஊரே வெடித்துவிடும். அய்யா விழுந்து விழுந்து சிரிப்பார். உடல் குன்னிப்போய் நடக்கமாட்டாமல் நிற்கும். அந்தக் கிடாயின் விறையில் ஓங்கி ஒரு எத்து எத்துவார். ம்மே... என்று அது அலறும்போது கை தட்டிச் சிரிப்பார். சேவல், கோழி அடிக்கும் போது அதன் இறக்கை உரோமம் ஒன்றைப் பிடுங்கி மண்டையின் நடுப் பகுதியில் குத்திவிட்டு தூர விசிறியெறிவார். அது குதித்து குதித்து துள்ளிச் சாவதை ரசித்துப் பார்ப்பார். உயிரோடு கோழியின் ரோமங்களை யெல்லாம் பிடுங்கிவிட்டு ஓட விடுவார். அது தள்ளாடித் தள்ளாடி ஓடி கீழே விழுவதைக் கை தட்டி ரசிப்பார். நிறை சினையில் ஆடுகள் ஈனும்போது போடுகின்ற பிரசவ வேதனைக் கூப்பாட்டை பெரிதும் ரசிப்பார். கழுதையைப் பிடித்து வந்து அதன் வாலில் காய்ந்த ஓலையைக் கட்டி கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் தீ வைத்து விட்டு அது ஊரெல்லாம் ஓடுவதையும் கத்துவதையும் ஓடி ஓடி ரசிப்பார்.

அன்று நடுச்சாமம் வீட்டின் முன் போலீஸ் வேன் நின்றதும், தடதடவென்று வீட்டிற்கு ஓடி வந்தது போலீஸ். எதையோ தேடுவதைப் போல வீட்டையெல்லாம் சல்லடை போட்டது. ஒன்றும் கிடைக்காமல் அய்யாவை மட்டும் அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்து போனது. மறுநாள்தான் தெரிந்தது அய்யா நேற்று ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பேங்க் காலனிப் பக்கம் பட்டப் பகலில் பூட்டை உடைத்து முப்பது பவுன் நகையும் ரொக்கமும் களவுபோன விஷயம். மூன்று நாள் கழித்து அய்யா வெளியே வந்தார். இவரோடு சேர்ந்து ஐந்துபேர் பட்ட வேதனையை கதை கதையாய் சொல்வார்.

“நான் ஆட்டுக்குத்தாண்டா காயடிச் சிருக்கன். ஆனா மனுசனுக்கு காயடிக்கிறத அங்கதாண்டா பாத்தன். உசுரோட சாகுற துன்னா அதுதாண்டா... அந்த அஞ்சு பேரும் போட்ட கூப்பாட்டல, இப்ப நெனச்சாலும் ஈரக் கொல நடுங்குது. இந்தப் பயகளும் அவுக புள்ள குட்டிகளும் ஏழேழு செம்மத்துக்கும் வெளங்க மாட்டாங்க.”



**எதையோ தேடுவதைப் போல வீட்டையெல்லாம் சல்லடை போட்டது. ஒன்றும் கிடைக்காமல் அய்யாவை மட்டும் அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்து போனது.**

இருவரும் குலுங்கிக் குலுங்கி அழுதார்கள். மூத்தவனின் அரவம் கேட்டதும் ஒன்றும் நடக்காததைப் போல அய்யா

சருவச்சட்டியில் தண்ணீரைத் தூக்கிக் கொண்டு ஓடினார். அம்மா சுளகில் இருந்த தானியத்தைச் சுண்டி சுண்டிப் புடைத்தாள்.

அய்யா மச்சின்மேல் ஏறி தூசி படிந்திருந்த அந்த மைனாக்கட்டை எடுத்தார்.. அது ஒட்டடை படிந்து அழுக்கேறிப் போயிருந்தது. அம்மா மறுபடியும் சொன்னாள்.

"எந்த உசுப்பிராணியையாவது கொண்ட்டு வர, அதை வளக்க, பெறகு செத்துப் போச்சுனா வீட்டோட உக்காந்து ஒப்பாரி வைக்க, ஒன்னோட பெரிய தொரட்டியாய் போச்சு."

அய்யா காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவர் கூட்டைத் தூசி தட்டி துடைப்பதிலேயே கவனமாயிருந்தார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த கிளிக்குஞ்சி கூட்டினுள் போய் உட்கார்ந்து கொண்டது. அய்யாவும் கிளியாக மாறிப் போனார்.

"டேய்! தாத்தாவுக்கு ஒரு முத்தம் கொடு"

"ச்சா.. பிச்சா.. ச்சா.. ச்சா..."

வலது கையில் உட்கார்ந்துகொண்டு இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தங் கொடுக்கும். அது கண்ணை மூடி மூடித் திறக்கும்போதே, நீரில் கல் எறிந்தவுடன் வட்ட வட்டமாய் விரியும் சிறு அலைபோல அதன் கண்களை ஒரு மெல்லிய சவ்வு மூடி மூடித் திறக்கும்.

"டேய்! தாத்தாவுக்குப் பேன் எடுத்து விடு."

அந்தத் தடித்த மொட்டை அலகை அய்யாவின் நரைத்த தலை முடிக்குள் புதைத்துக்கொண்டு கோதி கோதி விடும். அய்யா குனிந்து கொண்டு தலையைத் திருப்பித் திருப்பிக் கொடுப்பார். இரு தோள்களிலும் மாறி மாறி அமரும். விளக்குமாற்றின் ஈக்கி குச்சை எடுத்துக்



**உசுரோட சாகுற துன்னா அது தாண்டா... அந்த அஞ்சு பேரும் போட்ட கூப்பாட்ல, இப்ப நெனச்சாலும் ஈரக் கொல நடுங்குது. இந்தப் பயகளும் அவுக புள்ள குட்டிகளும் ஏழேழு செம்மத்துக்கும் வெளங்க மாட்டாங்க."**

கொண்டு முற்றத்தில் உட்கார்ந்து கொள்வார்.

"ம்... எடு இந்த சீட்ட"

சி...கீ...கி...... கி."

"ம்... எங்க குதிக்க, இந்தா, இந்த சீட்டக் கொண்டு போயி மாரியம்மா பாட்டிக்கிட்ட குடுமா, யேய். எங்க போற? நேர வாசலுக்குப் போ.."

"ஊர் ஆடு பூராவும் போயி கொள்ள நேரமாச்சு நிய் இன்க கிளி ஜோஸ்யம் பாத்திட்டு இரு."

கூட்டுக்குள் அடைத்து வாசலுக்கு நேராக தொங்கப் போட்டுவிட்டு வேக வேகமாய் ஆடுகளை அவிழ்ப்பார்.

"டேய், தாத்தாவுக்கு ஒரு டாட்டா சொல்லு".

"ட்டா...ட்டா...ட்டா..."

அய்யா வாயெல்லாம் பல்லாகப் போவார். அம்மாவின் முகத்தில் சிரிப்பாணி

வந்து போகும். அதைத் தாண்டி யாரும் வீட்டுக்குள் போய்விட முடியாது. வேற்றாள். அரவம் கேட்ட உடனேயே சன்னம் கொடுத்துவிடும். கூட்டுக்குள்ளேயே குதியாளம் போடும்.

"எந்தக் களவ, கையும் களவுமா புடிச்சிட்டமினு... இந்தக் குதியாளம் போடுற? பேசாமக் கெடயேன் நாயி."



**"எந்த உசுப்பிராணியையாவது கொண்ட்டு வர, அதை வளக்க, பெறகு செத்துப் போச்சுனா வீட்டோட உக்காந்து ஒப்பாரி வைக்க, ஒன்னோட பெரிய தொரட்டியாய் போச்சு."**

மூஞ்சியை உம்மென்று வைத்துக் கொண்டு உரோமத்தையெல்லாம் சிலிர்த்துக் கொண்டு குர் குர்ரென்று சத்தம் எழுப்பும். தன் இரண்டு கால்களையும் மாற்றி மாற்றி தூக்கிக் கொத்தும்.

"என்னடா... இந்தக் குந்தானி ஒன்னய வைறாளாக்கும். சீ கழுத போ."

மாரியம்மாவின் தாசாப் பேச்சில் அமைதியாகிப் போகும். குருவம்மாள் என்ற அந்தக் குண்டு பொம்பிளை மாரியம்மாளிட மிருந்து உலக்கையை வாங்கிக் கொண்டு திரும்பியதும் சொல்லும்.

"குந்தானி...குந்தானி."

மாரியம்மாள் முகத்தில் சிரிப்பாணி பொங்கி வழியும்.

"அக்கக்கா. பாம்பா, சோறு கொண்டா என்ற வார்த்தைகளைப் புரியும்படியாய் உச்சரிக்கும். எலுமிச்சங்காய் தண்டி சோற்று உருண்டையை வைத்துக் கொண்டு மாரியம்மாள் கூட்டை நெருங்கும் போதெல்லாம் அதை சீண்டிப் பார்ப்பாள். "தெனம் தெனம் வெட்டி முறிச்சிட்டு வருது. வேளா வேளாக்கி சோறு போட."

கிண்ணத்தில் வைத்த சோத்து உருண்டை சிதறி விழும்.

அய்யாவுக்கு ஆடு மேய்க்கிற நேரம் போக மீதி நேரமெல்லாம் கிளியோடுதான். இப் போதெல்லாம் அவர் முகத்தில் கவலையே இல்லை. தப்பித் தவறி ஒரு ஈ, எறும்பைக்கூட கொல்லமாட்டார். அது கூட்டுக்குள் இருக்கும் நேரம் ரொம்பக் குறைவு. அலகால் கொத்திக் கொத்திக் கதவின்மேல் ஏறி நிற்கும் பனங்கட்டையில் ஒற்றைக்காலைப் பற்றிக் கொண்டு தலை கீழாய் தொங்கும். துணிகள் தொங்கும் கொடியில் போய் உட்கார்ந்து கொண்டு விளையாட்டுக் காட்டும். ரூபாயை மடித்துக் கொடுத்துவிட்டால் நேராக மாரியம்மாவிடம் கொண்டுபோய் கொடுத்து விடும். இடையில் போய் பிடுங்கினால் பறந்துபோய் சேர்த்துவிடும்.

"என்னம்மா, ரூவாய புடுங்க வாரானோ? கொத்திப் புடு கொத்தி".

மாரியம்மாள் குழந்தையாகிப் போவாள்.

சாயங்கால நேரம். அய்யா முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு சீட்டு எடுக்க சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"கிளி ஜோஸ்யம் பார்க்கலியோ கிளி ஜோஸ்யம்."

"யோவ், ஒம்ம கிளிய இங்க கொண்டாரும்."

இருவரும் எதிரும் புதிருமாய் அமர்ந் தார்கள்.

அவன் கிளியைக் கையில் எடுத்து உற்றுப் பார்த்தான். கழுத்தைச் சுற்றியிருந்த கறுப்பு வளையத்தைப் பார்த்ததும் கண்களை அகல விரித்தான். வாயைத் திறந்து அதன் நாக்கை உற்றுப் பார்த்தான். கீழே விட்டவுடன் ஓடிப்போய் அய்யாவின் மடியில் நின்று கொண்டு ஒரு சன்னம் கொடுத்து, பதிலுக்கு கூண்டுக்குள் இருந்து சன்னம் வந்தவுடன் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"நல்ல அம்சம். ஜாதிக்கிளி."

"......"

"என்ன வெலைன்னா குடுக்கீடு?"

"பெத்த புள்ளைய எவனாவது வெலைக்கு விப்பானா?" அது மாதிரி இதுவும் ஒரு புள்ளடா, நான் இத கிளியா வளைக்கலேடா, இது எம் புள்ளடா. போடா எச்சிகல நாயே." கிளி ஜோஸ்யக்காரன் வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். தண்ணீர் குடத்துடன் வந்த அம்மா பதறிப் போனாள்.

"ஜோஸ்யக்காரப் பய நம்மக் கிளிய வெலைக்குக் கேட்டுட்டான்".

"பெய மகன சும்மாவா விட்ட செருப்பால அடிக்காம."

நாலைந்து நாட்களாக அய்யா பர பரப்புடன் காணப்பட்டார். கிளியை யாராவது விலைக்குக் கேட்டுவிட்டால் அதன் உயிருக்கு ஆபத்து என்று ஒரு நம்பிக்கை. கூண்டைக்கூட வெளியில் தொங்கவிட வில்லை.

மத்தியான வெயில், வீட்டின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு பாயில் படுத்துக்கொண்டே, ஏதோ முணுமுணுத்தப் படி கிடந்தார் அய்யா. சாத்தியிருந்த கதவைத் தள்ளிக்கொண்டு குட்டியாடு ஒன்று வீட்டினுள் வரவும் ஓடிப்போய் ஆட்டை விரட்டிவிட்டு கதவை ஓங்கி மிதித்து டப்பென்று சாத்தினார். கீச்சென்ற சத்தத்துடன் கிளி கதவின் மேலிருந்து பொத்தென்று கீழே விழுந்து துள்ளியது. அதன் கழுத்து நசுங்கி உரோமங்கள் சிலிர்த்துக் கொண்டிருந்தன. அய்யா ஓடிப்போய் வெண்கலக் கும்பாவை எடுத்து வந்து அதனுள் போட்டு கவுத்தி குச்சியால் தட்டிக்கொண்டிருந்தார். மாரியம்மாளும், மூத்தவனும் சுற்றி நின்றார்கள். சிறிது நேரம் கழித்து கும்பாவை எடுத்தார். அது செத்துக் கிடந்தது. இரு கால்களும் நீட்டியிருக்க ஒருக்களித்துக் கிடந்தது. அதன் கழுத்து நசுங்கி கன்றிப்போய் ரோமம் உதிர்ந்து அந்த இடம் வீங்கியிருந்தது.



**"குலுக்கையோரம் இருக்கிற பிஞ்சு பெட்டிக்குள்ள சப்புச்சவரு கெடக்கு பாரு. அதுக்குள்ள பாரு பழைய சங்கிலி கெடந்துச்சு. எடுத்து கெட்டிப்போடு."**

"அட சண்டாளப் பாவி, கொல பாதகம் ஏத்துட்டயே."

மாரியம்மாளின் அழுகைச் சத்தம் பலமாய்க் கேட்டது. அய்யா குலுங்கிக் குலுங்கியழுதார். மூத்தவன் கண்களில் கண்ணீர் திரள நின்றிருந்தான்.

செம்பு நிறைய ஆட்டுப்பால் பீச்சி மண்வெட்டியை எடுத்துக்கொண்டு போய் குழிதோண்டி பால் ஊற்றி புதைத்துவிட்டு வந்தார். இப்போதெல்லாம் அய்யா யாருடனும் பேசுவதில்லை. சரியாக ஆடுகூட மேய்க்கப் போவதில்லை. ராத்திரியில்



தூங்கும்போது தன்னாலேயே பேசுவதும், அலறி ஓடுவதும், கூப்பாடு போட்டுக் கத்துவதும், அதிகரித்துக்கொண்டே வந்தது. தவளையைக் கல்லெறிந்த சிறுவனை அடியாய் அடித்துவிட்டார். அடிக்கடி சொல்லிக் கொண்டார்.

"இனிமேப்பட எந்த உசுப்பிராணியும் நமக்கு வேண்டாம்."

கொஞ்ச நாள்தான் ஆகியிருக்கும். சாயங்காலம் ஆடுகளுடன் திரும்பியபோது அவர் கைகளில் அழகான ஒரு நாய்க்குட்டி, செவலை நிறம். தேங்காய் மண்டை. அதன் முகத்தைப் பார்க்கும்போது வாழைப் பூவிலிருந்து இரண்டு மடல்கள் தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்ற அகன்ற பெரிய காதுகள். "சனியன் வெலைக்கு வாங்கி யாந்துட்டயா, மரியாதையா போயி எங்கயாவது விட்டுட்டு வந்திரு."

அய்யா காதில் வாங்கிக் கொள்ள வில்லை. அதற்கு சோறு வைப்பதற்குத் தட்டு தேடுவதிலும், கட்டிப்போட சங்கிலி தேடுவதிலும் குறியாக இருந்தார். அம்மா சொன்னாள்.

"குலுக்கையோரம் இருக்கிற பிஞ்சு பெட்டிக்குள்ள சப்புச்சவரு கெடக்கு பாரு. அதுக்குள்ள பாரு பழைய சங்கிலி கெடந்துச்சு. எடுத்து கெட்டிப்போடு."

அய்யா தேட ஆரம்பித்தார். மாரியம் மாளின் கையில் ஒரு பழைய ஈயத்தட்டு இருந்தது.

**நன்றி: (அ)ஹிம்சை**
**இலக்கியச் சிந்தனைகள்:**
**(1994-ஆம் ஆண்டில் 12 சிறந்த சிறு கதைகள்)**
வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
சென்னை 17

தெரிந்து கொள்ளுங்கள்

**FINANCE (SALARIES) DEPARTMENT**

**G.O.No.236, dated 30th March 1995.**

(Bhava, Panguni,16, Thiruvalluvar Aandu 2026)

Medical Aid - Government Employees Health Fund Rules 1991 - Enhancement of quantum of Assistance - Orders - Issued.

---

**READ** - the following papers:-

1. G.O.Ms.No.18, Finance(Allowances-I) Department, dated 9.1.1992.

2. G.O.Ms.No.194, Finance(Salaries) Department, dated 16.3.1993.

3. G.O.Ms.No.91, Finance(Salaries) Department, dated 7.2.1995.

**Order--No.236, Finance (Salaries), dated 30th March, 1995.**

The Government Employees Health Fund Rules 1991 which were initially applicable to all categories of full-time regular (time scale) Government employees of the Government of Tamil Nadu have been subsequently extended to cover the dependent family members of the Government employees and also the officers of the All India Services serving in Tamil Nadu and to their dependent family members. At present financial assistance is sanctioned in the form of grant upto Rs.50,000/- or 75% of the actual cost of specialised advanced surgery/treatment as referred to in Schedule-I of the Rules and for treatment in countries outside India, in addition to grant, employees are also given loan upto Rs.50,000/- restricting the maximum assistance ie., loan and grant to Rupees one lakh.

2. Representations have been made to increase quantum of assistance under this scheme and also to extend special assistance for certain other types of surgeries. Orders have already been issued in the Government Order third read above extending the Health Fund Scheme for Brain Surgery, Hip replacement, Spinalcord surgery etc. Government have now decided to increase the maximum amount of grant from Rs.50,000/- to Rs.1 lakh or 75% of the actual cost of specialised advanced surgeries/treatment, whichever is less and also sanction an additional loan assistance of Rs.1 lakh when the treatment has to be taken abroad. Accordingly the following amendment is issued to Tamil Nadu Government Employees Health Fund Rules 1991:-

**AMENDMENT**

In the said Tamil Nadu Government Employees Health Fund Rules 1991 for the existing rules 6(c) 6(d) & 6(e) the following shall be substituted:

6.(c)(i) A grant of Rupees one lakh or 75% of the actual cost of specialised advanced surgery/treatment whichever is less shall be sanctioned when the treatment is taken in India.

(ii) In addition to grant, specified in sub clause (i) above a loan amount not exceeding Rupees one lakh shall also be sanctioned in the case of treatment in countries other than India. The loan sanctioned shall carry simple interest at 10%.

(d) Total assistance sanctioned shall in no case exceed a maximum of Rupees two lakhs.

(e) Loan sanctioned under Rule 6(c)(ii) shall be recovered from the salary of the employees in 80 equal monthly instalments and the interest at 10% in 25 equal monthly instalments. The Heads of Departments concerned shall be responsible for effecting such recovery.

3. There shall be no change in the other existing rules and conditions.

4. These orders shall take effect from first April, 1995 and shall apply to cases undergoing surgery/specialised treatment after this date.

(By order of the Governor)

**N. NARAYANAN,**
SECRETARY TO GOVERNMENT.

## விடா முயற்சியே வெற்றிக்கு அடிப்படை

ஒருவன் தான் மேற்கொண்ட முயற்சியில் முழுமையான வெற்றியைப் பெற வேண்டுமானால் பிடிவாதமான விடா முயற்சிதான் அதற்கு அடிப்படையாக இருக்கும்.

ஏதோ இரண்டொரு சோதனைகளைச் செய்துபார்த்து விடுவதன் மூலம் எந்த விஞ்ஞானியும் முழு வெற்றியை அடைந்ததில்லை.

முயற்சி செய்பவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதி பற்றி தாமஸ் எடிசன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''ஒரே சமயத்தில் அதிர்ஷ்டவசமாக நான் எந்த உண்மையினையும் கண்டு பிடித்து விடவில்லை. பலகாலம் தொடர்ந்து செய்த முயற்சியின் விளைவுதான் என்னுடைய ஆராய்ச்சி முடிவுகள். அறிவியலாளர்களில் சிலர் இரண்டு மூன்று பரிசோதனைகளைச் செய்துவிட்டு நின்று விடுகிறார்கள். விரும்பியதை அடையும் வரை நான் மேற்கொண்ட முயற்சியினை கைவிடுவதே இல்லை. நூறு முறை தோல்வியடைந்த ஒருவர் நூற்று ஓராவது தடவை வெற்றியடைந்து விட முடியும் என்பது அனுபவ பூர்வமாக நான் உணர்ந்த உண்மை. எனக்கு அபாரமான மூளை இருப்பதாகவும், அதனால்தான் நான் வெற்றியடைந்துவிடுவதாகவும் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது என்னைக் குறித்து நண்பர்கள் கூறும் புகழ் மொழியே தவிர அதில் உண்மை ஏதும் இல்லை. **முயன்றால்** என்னைப்போன்று என்னைவிடச் சிறப்பான வெற்றியினை அடைய முடியும் என்று நிச்சயமாக என்னால் கூறமுடியும்.''

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 28.11.1996.

## கொடி நாள் செய்தி

பெற்ற தாயையும் பெற்றெடுத்த செல்வங்களையும் உற்ற மனைவியையும் உறவினர்களையும் பிரிந்து, பிறந்த நாட்டின் பெருமை காத்திடும் முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தும் திருநாள் கொடிநாளாகும்.

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, கொட்டும் மழையிலும் குளிரிலும் நின்று தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது இந்திய நாட்டின் புகழைக் காக்கும் முப்படை வீரர்களின் தியாகத்தைப் போற்றுவதோடு அவர்களின் குடும்பத்தினர்க்கு நல்வாழ்வு அமைத்துத் தருதலும் நமது கடமையன்றோ!

அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளிவீச கொடிநாளின் கொடி விற்பனைக்கு மனமுவந்து பெருமளவில் நிதி அளிப்போம். அந்த நிதி அவர்களின் குடும்பத்தினர்க்குப் பல்வேறு வகையிலும் பயன் தரும்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் தன்னலம் கருதாத அந்தத் தியாக வீரர்களுக்கான கொடிநாள் நிதிக்குத் தொகை அளிப்பதில் தமிழ்நாடு எப்போதும் தனி இடத்தைப் பெற்று வந்திருக்கிறது. எனவே இவ்வாண்டும் பெரும் அளவில் நிதி வழங்கி முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நம் வணக்கத்தையும் நன்றியையும் காணிக்கை ஆக்குவோம்.

இலக்கியம்

# இலக்கிய இன்பம்

பேராசிரியர் முனைவர் இரா. சேது

மக்களின் வாழ்வுக்கும் வளத்திற்கும் உறுதுணையாக விளங்குவது இலக்கியம். அவ்விலக்கியம் மக்கள் வாழ்வையே கருப்பொருளாகக் கொண்டு தோன்றுகிறது. நல்ல இலக்கியம் காலம், நாடு, மொழி, இனம் கடந்து வாழ்கிறது. இலக்கியத்தின் வடிவங்கள் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்ற போதிலும், அவை ஊட்டும் உணர்வுகள் காலத்தை வென்று வாழ்கின்றன.

மனித வாழ்வில் காணும் உறவும் பிரிவும், பகையும் நட்பும் எல்லாக் காலத்திற்கும் பொதுவானவை. இந்த உணர்வுகளுக்கு உருக்கொடுக்கும் இலக்கியம் நிலைபேற்றைப் பெறுகிறது. இது புலவனின் நெஞ்ச நெகிழ்ச்சியால் பிறக்கிறது. இலக்கியம் அறிவால் எழுதப்படுகிறதென்பதைவிட அகத்தால் எழுதப்படுகிறதென்பதே உண்மையாகும். இதனைத் தமிழ் இலக்கியத்தில் நிறையக் காணலாம்.

சங்க காலத் தமிழர்கள் வாழ்வை அகம் புறமெனப் பகுத்து இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர். தமிழ் இலக்கியத்தில் அகமாகிய காதலைப்பாடிய கவிதைகளே மிகுதியெனலாம்.

புலவர் தாமோதரனார் இம்மெல்லிய காதல் உணர்வைமிக நுட்பமாகப் பாடியுள்ளார். காமமிக்க தலைவி ஒருத்தி மாலைப்பொழுது வந்ததைக் கண்டு கலங்குகிறாள். காதலர்கள் இணைந்திருக்கும்போது மகிழ்வதும், பரிந்திருக்கும்போது துன்புறுவதும் இயற்கையாகும். தாமோதரனாரின் பாடலில் தலைவியைப் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. மாலைப் பொழுது வந்து விட்டதென்ற நிகழ்ச்சியை மட்டுமே படம் பிடித்துக்காட்டுகிறது. கதிரவன் மறைந்த மாலைப்பொழுதில் இரைதேடச் சென்ற பறவைகள் தம் குஞ்சுகள் தங்கியுள்ள மரத்தினை நாடிச்சென்று அங்குள்ள குஞ்சுகளுக்குத் தம் அலகுகளால் இரையை ஊட்ட விரைந்து சென்றன என்ற கருத்தை விளக்கியே இப்பாடல் அமைந்துள்ளது.

இரை தேடச் சென்ற பறவைகள் தங்கள் கூட்டிற்கு மாலைப் பொழுதிலே திரும்புகின்றன. பறவைகள் கூடு நோக்கித் திரும்பும் மாலைப்பொழுது, பிரிந்த காதலர்க்குத் துன்பமாக அமைவது. காதலியின் பிரிவுத்துயரை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் உணர்த்துகிறார் புலவர். இதனைக் ‘காமமிக்க கழிபடர்கிளவியாற் காணப்படும் பொழுதுகண்டு சொல்லியது’ எனப்பாடலின் அடிக்குறிப்பில் குறிக்கப்பெற்றுள்ளது. இயற்கை நிகழ்ச்சியை எடுத்துரைத்து, அதன் வாயிலாக தலைவனைப் பிரிந்த தலைவியின் மனவுணர்வைக் கீழே கண்ட பாடலில் வரைந்து காட்டுகிறார்.

‘ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்து
  தளியதாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுறவோங்கிய நெறியயன் மரா அந்த
  பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண்டமையின் விரையு மாற்செலவே’

(குறுந்தொகை : 92)

வளைந்த சிறகுகளையுடைய பறவைகள் தம் குஞ்சுகளின் வாயினுள் தம் அலகால் இரையை எடுத்து ஊட்டும் இனிய காட்சியை எழிலுற எடுத்துக்காட்டுகிறார். தாயன்பைக் காட்டிய புலவர், பொழுதுகண்டு துன்புறும் தலைவியின் பிரிவுத்துயரை மறக்கவில்லை. பிரிவு துன்பம் தந்த போதிலும் அதனைக் கூறும் பாடல் தேனென இனிக்கிறது.

இலக்கியம் பிறக்க உணர்ச்சி இன்றியமையாதது. புலவன் தான் கூறுகின்ற காட்சிகளில் தான் பெற்ற உணர்வை வெளிப்படுத்துகின்றான். அவ்வுணர்வு ஆற்றலோடு வெளிப்படுகின்றபோது படிப்பவனின் நெஞ்சத்தில் ஆழமாகப் பதிகிறது. இதனைக் கபிலர் பாடல்களில் காணலாம். கபிலர் பரம்பு மலையை ஆண்ட பாரியோடு நெருங்கிய நட்புப் பூண்டு விளங்கினார். பாரியின் கொடைத்திறனையும்,

பறம்பு மலையின் வளத்தினையும் நன்கு அறிந்தவராகக் கபிலர் இருந்தார். வென்றெறி முரசின் வேந்தராம் பாரி, வஞ்சனையால் கொல்லப்பட்டபின், பறம்புமலையை விட்டுப்பரிய நேர்ந்ததைக் கபிலர் அவல ஓவியமாக வரைந்து காட்டுகிறார். இது பாரியின் மீது கொண்ட அன்பிற்கு இலக்கணமாக விளங்குகிறது. 'பறம்பே! நின்னை நாடிவருபவருக்கு மதுவை வாரிவழங்கினாய். ஆட்டுக்கிடாய்களை வெட்டி ஊனும் சோறும் அளித்து மகிழ்வித்தாய். வந்தோரை உவந்து வரவேற்று விருந்தளித்த பாரி மாய்ந்துவிட்டான். அவன் மக்களை மணக்க ஏற்ற கணவனை நாடி எங்கு செல்வேன்? பெருமைபெற்ற பறம்பே! பாரியின் பிரிவால் செய்வதறியாது கலங்கிக் கண்ணீர் வடித்து உன்னை வணங்கி விடைபெறுகின்றேன்.'

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டு அன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணெம் தொழுது நிற்பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறு இருங்கூந்தல் கிழவரைப் படர்ந்தே!

(புறம்.113)

இப்பாடல் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்பாடலில் வெளிப்படுகின்ற உணர்ச்சி, தனிமனிதன் கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும், பெறற்கரிய நண்பனை இழந்ததால் அடைந்த துன்பத்தையும் வெளிப்படுத்துகிறது. இன்று கற்போரையும் இப்பாடல் கண்கலங்கச் செய்கிறது. அறிவியல் வளர்ச்சியால் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டாலும் அடிப்படை உணர்வுகள் மாறுவதில்லையென்பதையே நினைவூட்டுகிறது.

உலகில் இன்பமும் துன்பமும் நிறைந்தே காணப்படுகின்றன. மனிதனின் இன்பத்தைப் பெறுகின்றபோது மகிழ்வதும், துன்பத்தைக் கண்டு கலங்குவதுமாக உள்ளான். இந்நிலை மறந்து இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக எண்ணுகின்ற மனநிலை வேண்டுமென வேண்டுகோள்விடுக்கின்றார் ஒரு புலவர். அதற்கு அவர்கூறும் காரணம், உலகம் துன்பம் நிறைந்தது. வாழ்வை இனிமையாக்கிக் கொள்ள



வேண்டுமானால் துன்ப உலகில் இனியனவற்றைக் கண்டு இன்புற வேண்டு மென்று கூறுகிறார். அத்தகைய மனநிலை எல்லாருக்கும் வாய்ப்பரிதாகும். இதனை நற்கண்ணியார் என்ற புலவர் வாழ்வில் காணும் உண்மைகளை எடுத்துக்காட்டித் தெளிவுறுத்துகிறார்.

ஒரு வீட்டில் அழுகை ஒலியும், அடுத்த வீட்டில் மணவிழா ஓசையும் கேட்கிறது. ஒரு வீட்டில்காதலனோடுவாழும்மகளிர்மலரணிந்து மகிழ்கின்றனர். பிறிதோர் வீட்டில் கணவனை இழந்த மகளிர் கண்ணீர் வடித்துப் புலம்புகின்றனர். இவ்வாறு முரண்பட்ட உலகத்தைப் படைத்த இறைவன் புலவர்க்குப் பண்பில்லாதவனாகக் காட்சியளிக்கின்றான். இறைவனின் இக்கொடுஞ்செயலால் சினமுற்ற புலவர்.

'படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்' என்றகடுமொழியைவீசுகிறார்.

தான் கண்ட உண்மையை, உலகுக்கு அறிவுறுத்தும் வகையில் அப்பாடலைப் பாடியுள்ளார். அப்பாடல்,

'ஓரில்நெய்தல்கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்ப்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்
இன்னாது அம்ம இவ்வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந்தோரே'

*(புறம் 174)*

மனிதவாழ்வு பயனிறைந்ததாக் அமையவேண்டும். பயனில்லாத வாழ்வு விளைவில்லாதநிலம்போன்றதாகும். பகுத்தறிவு பெற்ற மனிதன் பிறருக்குப் பயன்படாமல் வாழ்ந்தால், அவன் உயிரோடு இருந்தும் இறந்தவனாகவே எண்ணப்படுவான். வாழ்வு எவ்வாறு அமையவேண்டுமென்பதை ஒரு புலவர் தாம் கண்ட காட்சியின் வாயிலாகத் தெளிவுறுத்துகின்றார். புலவர் ஒருநாள் வயல்வெளியில் நடந்து செல்லுகின்ற போது வயலில் மலர்களோடு பூத்துக் குலுங்கும் கரும்பினைக் கண்டு மகிழ்கிறார். கரும்பு பூப்பூத்துக் கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிக்கிறது. சில நாட்கள் கழித்து அவ்வழியாகப் புலவர் வருகின்றபோது முற்றிய கரும்பிலிருந்து சாறு பிழிந்து கொண்டிருந்தனர். சாறு பிழிந்த பின்னர் கரும்பின் சக்கையை வெளியில் உலர்த்தினர். பின்னர் வேறு கரும்பிலிருந்து சாறு பிழிவதற்கு வெயிலில் உலர்த்தியசக்கையை நெருப்பிலிட்டுஆட்டினர். கரும்பாக இருந்தபோது அக்கரும்பு சாறு தருவதற்குப் பயன்பட்டது. சாறு பிழிந்த பின்னர் சக்கையாக இருந்து வேறு ஒரு கம்பிலிருந்து சாறு பிழிவதற்குப் பயன்பட்டது. இக்காட்சி புலவர் நெஞ்சில், ஆழமாகப் பதிந்தது. இக்காட்சியின் வாயிலாக மக்கள் உலகுக்குப் பயன்பட வாழ வேண்டுமென்ற உண்மையை உணர்ந்தார். இதனைநாலேவரிகளில்நயம்படஉணர்த்தினார்.

'கரும்பாட்டிக்கட்டி சிறுகாலை கொண்டோர்
துரும்பெழுந்து வேங்கால்துயராண்டுழவார்
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கடல்பரிவ திலர்'

(நாலடியார் 35)

இறப்பைப் பற்றிக் கவலைப்படாமல், உயிரோடு வாழ்ந்தபோது எந்த அளவு பயன்பட வாழ்ந்தோமென்பதை எண்ணிப் பார்க்க இப்பாடல்இடமளிக்கிறது.

இலக்கியம் வாழ்விலிருந்து பிறந்த போதிலும், வாழ்வைச் செம்மைப்படுத்தும் கலைப்பெட்டகமாக விளங்குகிறது.அதுதரும் இன்பம்எல்லையில்லாததாகும்.

## ஏழே நாட்களில் எழுதப்பட்ட நாவல்

ஆங்கில அகராதியை உருவாக்கியவர் என்ற பெருமைக்குரியவர் சாமுவேல் ஜான்சன். அவர் ஒரே ஒரு நாவலையும் எழுதியிருக்கிறார். அதையும் எதற்காக எழுதினார் தெரியுமா? நோய்வாய்ப்பட்டிருந்த தமது தாயாரின் வைத்தியச் செலவைச் சமாளிப்பதற்காக, ஏழே நாட்களில் அவர் எழுதி முடித்த அபிசீனிய இளவரசர் ரசேலஸ் என்ற நாவலுக்கு 100 பவுன் சன்மானமாகக் கிடைத்தது. ஆனால் அத்தொகை தாயாருடைய வைத்தியச் செலவுக்கு உதவவில்லை. ஏனெனில் பணம் கிடைப்பதற்குள் அவர் இறந்துவிட்டார். சவ அடக்கச் செலவுக்குத்தான் அத்தொகை பயன்பட்டது. 1759-ல் இந்த நாவல் வெளி வந்தது.

# மகாகவி பாரதியின் இல்ல மேம்பாட்டுப் பணிக்கு நிதி ஒதுக்கீடு.

*மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணை*

தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தினை மிகப்பொலிவுடன் உருவாக்கிட வேண்டும், என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அதன் அடிப்படையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் செய்தித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, தயாரித்த திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஒப்புதல் அளித்தார். அதன்படி திருவல்லிக்கேணியிலுள்ள பாரதியார் இல்லத்தில் மேம்பாட்டு பணிகளுக்காகவும் நூலகம் அமைக்கும் பணிகளுக்காகவும் 8 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

பாரதியார் இல்லத்தில் அமைக்கப் படவுள்ள நூலகத்தில் பாரதியின் அனைத்துப் படைப்புகள் பாரதியாரைப் பற்றியும், பாரதியின் கவிதைகள் பற்றியும், அனைத்து நூலாசிரியர்கள் எழுதிய நூல்கள், ஆய்வு கட்டுரைகள், பாரதி பற்றிய பிற மொழி நூல்கள் ஆகியவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

பாரதி காலத்தில் இருந்த நாளிதழ்களின் பிரதிகள், பாரதியின் கையெழுத்து மற்றும் முக்கியமான சில கவிதைகள் 'லாமினேட்' செய்து பார்வைக்காக வைக்கப்படும்.


பாரதி இல்லத்தில், பின்புறமுள்ள திறந்தவெளி அரங்கம் சீர் செய்யப்பட்டு அரங்கில் இலக்கியக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாகப் பார்வையாளர்கள் 500 பேர் அமர்வதற்கு வேண்டிய நாற்காலிகள் 'மைக்' போன்ற கருவிகள் வாங்கப்படும்.

நினைவு இல்லத்தில் பாரதியார் தொடர்புடைய இசைப்பாடல்கள், ஒலிபரப்புவதற்கு வேண்டிய கருவிகள் வாங்கப்பட்டு நாள்தோறும் ஒலிபரப்பப்படும்.

பாரதியார் பற்றிய செய்திப்படங்கள், திரைப்படங்கள், நாட்டுப் பற்றினை விளக்கிடும் குழந்தைகள் படங்கள் பார்வையாளர்களுக்குக் காண்பிக்க ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வீடியோ பதிவு நாடாக்கருவிகள், கேசட்டுகள் வாங்கி உபயோகத்தில் வைக்கப்படும்.

பாரதியார் பிறந்தநாளான டிசம்பர் திங்கள் 11-ம் நாள் அவரது நினைவு இல்லம் மிகப்பொலிவுடன் அமைவதற்கு வேண்டிய மேம்பாட்டுப்பணிகளை தொடங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் தமிழக-அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.





விமானப் பயணிகள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விமானநிலையத் தொடர்பு சொகுசுப் பேருந்துகளை 6.12.1996 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனுள்ளனர்.

டாக்டர் எம்.ஜி.ஆர். - ஜானகி மகளிர் அறிவியல் மற்றும் கலைக்கல்லூரியினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 9.12.1996 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் தலைமையில் திறந்து வைத்தார்.





மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாளான 10.12.1996 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன், வணக்கத்துக்குரிய மேயர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



அரசின் நலத்திட்டப் பணிகள், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை, தனியார் தொலைக்காட்சி மற்றும் சென்னைத் தொலைக்காட்சியில் எவ்வாறு விளம்பரப்படுத்தலாம் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம், மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு வ. முல்லைவேந்தன் அவர்கள் தலைமையில், 3.12.1996 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. செய்தித்துறைச் செயலர் திரு துரை. சுந்தரேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., தமிழக அரசு திரைப்படப்பிரிவு இயக்குநர் திரு. பி. அமிர்தம், மற்றும் தனியார் தொலைக்காட்சி மற்றும் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

# படமும் செய்தியும்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.12.1996 அன்று இருங்காட்டுக் கோட்டையில் ஹீண்டாய் மோட்டார் கார் தயாரிக்கும் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள், திரு சங் மாங் யூ தலைவர், ஹண்டாய் மோட்டார் கம்பெனி ஆகியோர் உடன் உள்ளார்கள்.



# தமிழகப் புதிய ஆளுநராக கிருஷ்ணகாந்த் பதவி ஏற்றார்

மேதகு தமிழக ஆளுநராக இருந்த டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் 2.12.96 அன்று காலை ஐதராபாத்தில் இயற்கை எய்தினார்.

ஆந்திர மாநில ஆளுநராக இருக்கும் திரு.கிருஷ்ணகாந்த் அவர்களை மேதகு தமிழக ஆளுநர் பொறுப்பையும் கூடுதலாகக் கவனிக்கும்படி மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணையைத் தொடர்ந்து, புதிய தமிழக ஆளுநராக திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் 2.12.96 அன்று பதவியேற்றார்.

ஆந்திர மாநில ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் ஐதராபாத்திலிருந்து விமானம் மூலம் சென்னைக்கு வந்தபோது சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர், சென்னை மாநகர மேயர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் சால்வை அணிவித்தும், மலர்க்கொத்து கொடுத்தும் வரவேற்று அழைத்து வந்தனர்.

பின்னர், மாண்புமிகு தமிழக அமைச்சர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய ஆளுநருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

பின்பு ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்பு விழா எளிமையாக நடைபெற்றது. அரசு தலைமைச் செயலாளர் திரு கே.ஏ. நம்பியார், இ.ஆ.ப., குடியரசுத் தலைவரின் உத்தரவைப் படித்தார். அதைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு கே.ஏ. சாமி அவருக்குப் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

இந்தப் பதவியேற்பு விழாவில், முதல்வர் கலைஞர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மேயர் திரு. மு.க. ஸ்டாலின், துணைச் சபாநாயகர் திரு பரிதி இளம்வழுதி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பதவியேற்பு விழா முடிந்தவுடன், முதல்வர் கலைஞர் அவர்கள் புதிய ஆளுநருக்குச் சால்வை அணிவித்துக் கவுரவித்தார்.



# அரசு உதவிகள் பெற யாரை அணுகவேண்டும்

## வருவாய்த்துறை

| திட்டத்தின் பெயர் | தகுதிகள் - நிபந்தனைகள் | அணுகவேண்டிய முகவரி |
|---|---|---|
| முதியோர் ஓய்வு ஊதியம் | 65 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்). | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர். |
| உடல் ஊனமுற்றோர் ஓய்வு ஊதியம் | 45 வயதுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றோர் ஆதரவற்ற உடல் அங்கஹீனமாக உள்ள நபராக இருக்க வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்). | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர். |
| ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற விதைவைகள். வயது வரம்பு இல்லை. உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்). | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர். |
| ஆதரவற்ற விவசாயத் தொழி-லாளர் ஓய்வூதியத் திட்டம் | 80 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். விவசாயக் கூலித் தொழி-லாளியாக இருந்திருக்க வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்) | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர். |
| கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் | 30 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்றவராக இருக்க வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்) | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர் |
| துயர் துடைப்பு நிவாரணத் திட்டம் | குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ. 7200/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இறந்தவர் சம்பாதிப்பவராக இருந்திருக்க வேண்டும். 22.6.92க்கு முன் இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணத் தொகை ரூ. 3000/-ம் 22.6.92க்கு பின் இறந்தவர்களுக்கு நிவாரணத் தொகை ரூ. 5000/-மும் இதைத்தவிர்த்து முதியோர் ஓய்வூ தியம் பெறுவோர்க்கும் ஆண்டிற்கு இருமுறை அதாவது பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இலவசமாக வேட்டி, சேலை வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர். |
| விபத்து நிவாரணம் | இறந்தவர் குடும்பத்தில் சம்பாதிப்பவராக இருக்க வேண்டும். அரசு அனுமதிக்கப்பட்ட 44 வகையான தொழில் செய்பவர்களில் ஏதாவது ஒன்றில் பணியாளராக இருந்திருக்க வேண்டும். இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 10,000/- நிவாரணம் அளிக்கப்படும். காயமுற்று உடல் ஊனமுற்றோர்க்கு ரூ. 5000/- முதல் ரூ. 7000/- நிவாரணம் அளிக்கப்படும். 28.8.96 லிருந்து இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 15,000/- வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர். |
| வெள்ளம் மற்றும் தீ விபத்து நிவாரணத் தொகை | குடியிருப்பு முழுவதுமாக அழிந்து விட்டால் ரூ. 500/-ம் பகுதியாக சேதமடைந்து இருந்தால் ரூ. 250/-ம் அளிக்கப்படும். மேலும் இது தவிர குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படும். மேலும் வெள்ளம், தீ விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ. 2000/-ம் வழங்கப்படும். இதுதவிர, தீ விபத்து ஏற்பட்ட குடும்பத்திற்கு ரூ. 1100/- யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தாரால் அளிக்கப்படும். | சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப்பணி வட்டாட்சியர். |

# ஆசியாவில் சுற்றுப்புறச் சீரழிவு

கராச்சியில் இருந்து பாங்காக் வரையிலான நகரங்களில் அதிக மக்கள்தொகை, போதிய இருப்பிட வசதியின்மை, பாதுகாப்பான நீர்ப்பற்றாக்குறை சுகாதார வடிகால் பிரச்சினைகள், தொழில்மய. மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றில் இருந்து வெளியேறும் நச்சுத்தன்மை வாய்ந்த புகை ஆகியன மனிதன் உயிர்வாழப் பெரும் அச்சுறுத்தலை விளைவிக்கின்றன.


நகர மக்கள் அவர்களது சுகாதாரத்திற்கும் உயிர் வாழ்வுக்கும் ஆபத்தான நிலைமைகளில் வாழ்ந்து வருகிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனத்தின் செயலர் திரு. ஹிரோசி நகஜிமா கூறுகிறார்.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் [illegible] 1990 ஆம் ஆண்டு வரை [illegible] நகர்ப்புற மக்கள் தொகையில் பெரும் அதிகரிப்பை ஏற்படுத்திய ஆசிய நகரங்கள் பொருளாதார சக்தியிலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. 2015 ஆம் ஆண்டு அளவில் உலகில் முன்னேற்றமடைந்த 27 நகரங்களில் 17 நகரங்கள் ஆசியப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும். 2020 ஆம் ஆண்டு அளவில் ஆசிய நாடுகளில் உள்ள மக்களில் பாதிக்கும் மேலானோர் நகர மக்களாக இருப்பார்கள்.

1988-ஆம் ஆண்டின் முற்பகுதியில் உலகின் மிகவும் மாசடைந்த 7 நகரங்களில் 5 நகரங்கள் ஆசியாவில் அமைந்து உள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருக்கின்றது. பெய்ஜிங், கல்கத்தா, ஜகார்த்தா, புதுடில்லி, ஷென்யாங் ஆகியனவே அந்த ஐந்து நகரங்கள் ஆகும்.

பொருளாதார மேம்பாடு, சுகாதாரப் பராமரிப்பு சேவைகளுக்குக் கூடுதல் வளங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அதேவேளையில் மோசமடைந்து வரும் நகர்ப்புறச் சூழல் தரமும் இதனோடு தொடர்புபட்ட ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகளும் நகர்ப்புறங்களில் முன்னொரு போதும் இல்லாதவாறு அடிக்கடி சுகாதாரப் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன. அருகி வரும் வளங்களால் இந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முடியவில்லை என்று உலக சுகாதார நிறுவனத்தின் மேற்கு பசுபிக் பிராந்திய செயலர் திரு எஸ்.டி. ஹான் தெரிவித்தார்.

நோய்களின் அறிகுறிகளையும் நச்சுத்தன்மை ஏற்படும் நகரங்களையும் கண்டுபிடிப்பது சிரமமில்லை. பொருளாதார மேம்பாட்டை எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஒரு சஞ்சீவியாகவே கருத முடியாது. உதாரணமாக சீனா அண்மை வருடங்களில் உலகின் மிகவேகமான மக்கள்தொகை அதிகரிப்பு நாடாகக் கணிக்கப்பட்டுள்ளது. புகைக்கரி, சல்பர் டயோக்சைட், தொழில் சாலை கழிவுகள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் ஆகியன சீன நகரங்களில் 1988 ஆம் ஆண்டில் இருந்து புற்று நோயினால் மரணமடைவோரின் விகிதாசாரத்தை 6.2 சதவிகிதமாகவும் நுரையீரல் புற்றுநோயினால் மரணமடைவோரின் விகிதாசாரத்தை 18.5 சதவிகிதமாகவும் அதிகரித்துள்ளன. ஆண்களுக்கு ஏற்படும் புற்றுநோயின் அளவு சங்காய் நகரிலேயே மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது.



வட சீனாவில் அதிக நிலக்கரிப் பயன்பாட்டினால் ஏற்படும் புகை காரணமாக பல மாதங்களாக செயற்கைகோள் புகைப்படங்களில் பல நகரங்கள் காட்சி தராமல் மறைந்து வருகின்றன. பாங்காக் நகரைச் சேர்ந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆராய்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு மேற்கொண்ட ஆய்வில் இருந்து 59.5 சதவிகிதமான பிலிப்பைன்சின் வாகன ஓட்டிகள் குணப்படுத்த முடியாத சுவாச நோய்களினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆசிய மேம்பாட்டு வங்கி 1991 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வின்படி பிலிப்பைன்சில் சுகாதாரத் தீங்கை விளைவிக்கும் எனத் தடை செய்யப்பட்ட பொருள்களினால் ஏற்பட்ட நோய்கள் அதிகம் எனத் தெரியவந்துள்ளது.

ஆசிய நகரங்களில் மோட்டார் கார்களுக்கென கிராக்கி மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் ஆசிய நகரங்களில் காற்று மாசடைதல் மோசமாகி

வருகிறது. சில நகரங்கள் காரீயம் அற்ற எரிபொருளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. ஆனால் வீதி களில் போக்குவரத்துத் தடை காரணமாக வாகனங்கள் மெது வாகப் போவதனால் வரும் புகை காற்றை மாசடையச் செய்து வருகின்றன. ஆசியாவின் நகர வாசிகள் கடந்த ஐந்து ஆண்டு களாக மிக மாசடைந்த காற்றையே சுவாசித்து வருகின்றார்கள். மின் சார உற்பத்திக்கான நிலக்கரிப் பயன்பாடும், வாகனங்களுக்கும் தொழில் நிலையங்களுக்குமான எரிபொருள் பயன்பாடும் காற்றைக் கெடுக்கின்றன.

இந்த கழிவுப் பொருள்களால் சல்பர் டை ஆக்சைட், நைட்ரஜன் ஆக்சைட், கார்பன் மோனாக் சைட், காரீயம் போன்றவை காற்றில் கலக்கின்றன. இதனால் சுவாசப் பை நோய்களும் இருதய நோய்களும் நரம்புத் தளர்ச்சியும் புற்று நோயும் ஏற்படுகின்றன. நிலத்தின் கீழ் மக்கிய எரிபொருள் களை எரிப்பதால் சல்பர் டை ஆக்சைடு வெளியேறுகிறது. சல்பர் டை ஆக்சைடு சுவாச நோயையும் இருதய நோயையும் ஏற்படுத்துகிறது. வாகனங்களில் இருந்து வெளியேறும் கார்பன் மோனாக்ஸைடு இரத்தத்தை நஞ்சாக்குகிறது. இதேவேளை காரீயம் சிவப்பு இரத்த உயிரணுக் களைப் பாதிக்கிறது. ஈரல் சிறு நீரகங்கள் ஆகியன செயற் படுவதையும் இது பாதிக்கிறது. இதனால் நரம்பியல் நோய்கள் ஏற்படுகின்றன.

சிறுவர்களும் முதியோர்களும் இத்தகைய நோய்களால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று ஸ்ட்ரீபன் தம்லின் என்ற அறிஞர் கூறு கின்றார். மனிதனின் உடல் தன்னைத்தானே சுத்தப்படுத்திக் கொள்ளும் தன்மையைக் கொண் டுள்ளது. ஆனால் அதிகரிப்பான மாசுக்கு நீண்ட நேரம் உடலினால் தாக்குப்பிடிக்க முடியாது என்று உலக சுகார்தார நிறுவனத்தின் பிராந்திய ஆலோசகரான தம்லின் கூறுகிறார்.

மின்சார உற்பத்தி, உருக்கு சிமெண்டு ஆகியவற்றின் உற்பத்தி போன்றவற்றினாலும் காற்று மாசடைகின்றது. நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் நகர மையத்தில் இருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் முழு அளவில் சிமெண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. புதுடில்லியில் அமைந்துள்ள இந்திர பிரத்தா மின்சார உற்பத்தி ஆலையில் பணியாற்றும் ஊழியர்களில் எலும்புறுக்கி நோய்க் கிருமிகள் பெரும்பாலும் உள்ளன. இந்தத் தொழிற்சாலையில் இருந்து பெரும் தொகையான கந்தகம், நைட்ரஜன் ஆக்சைடு ஆகியன வெளியேற்றப்படுகின்றன. கராச்சி யில் அமைந்துள்ள பாகிஸ்தான் உருக்கு ஆலையும் பெருமள விலான நச்சுப் புகையை வெளி யிடுகிறது.

ஆசியாவின் மக்கள் நெருக்கடி மிகுந்த நகரங்களில் மூன்றில் ஒரு பங்கு மக்களும் சுத்தமான குடிநீர் வடிகால்கள் போன்ற வசதிகள் இல்லாத வீடுகளில் வசிக் கிறார்கள்.

உண்மையில் இந்த வீடுகளின் நெருக்கடியே அம்மை, சின்னம்மை நோய் பெருகுவதற்குக் காரண மாகும். மக்கள் நெருக்கமாக வாழும் சமூகங்களில் சின்னம்மை நோய் வெகுவாகப் பரவுகிறது. சிறுவர்கள் மத்தியில் இந்த நோய் பரவும் வேகம் கூடுதலானது. சுருக்கமாகக் கூறுவதானால், அதிக மக்கள் தொகையுள்ள நகரங்கள் தொற்றுநோய் வேகமாகப் பரவும் இடங்களாக இருக்கின்றன என்று உலக சுகாதார நிறுவனம் கூறு கின்றது.

பிலிப்பைன்ஸ் வறுமை குறித்து உலக வங்கி மேற்கொண்ட ஆய் வொன்றில் இருந்து நகர்ப்புறக் காற்று மாசடைவதனால் வறிய மக்களே கூடுதலாகப் பாதிக்கப் படுகின்றார்கள் என்று தெரிய வருகிறது. சுவாச நோய்கள் இவர்கள் மத்தியில் கூடுதலாக பரவு கிறது. செல்வந்தர்கள் போலன்றி வறியவர்கள் குளிரூட்டப்பட்ட கார்களில் பிரயாணம் செய்யாத தால் வெளிக்காற்றின் தாக்கத் திற்கு ஆளாகிறார்கள். வாக னங்கள், தொழிற்சாலைகள் ஆகிய வற்றினால் மாசடையும் வீதி யோரங்களில் வறிய சிறுவர்கள் நடமாடுவதால் அவர்கள் இந் நோய்களுக்குப் பலியாகிறார்கள்.

சிங்கப்பூரைத் தவிர, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 20 சத விகிதத்திற்கும் குறைவான நகர்ப் புற வீடுகள், மத்திய சாய்க்கடை முறையுடன் தொடர்புபட்டவை யாக உள்ளன. பெரும் நகரங் களில் வசிக்கும் வறியவர்களின் நான்கில் ஒரு பங்கினர் மாத் திரமே நீரை முறையாகப் பெறு கின்றனர். வறியவர்கள் அநேக மாக மாசடைந்த நீரையே பெற்றுக்கொள்கிறார்கள். தாய் லாந்தில் சாவோ, பிராயா ஆறு பிலிப்பைன்சின் பசிக் ஆறு போன்ற பல ஆறுகள் மிகவும் மோசமாக மாசடைந்துள்ளன. தெற்காசியத் துணைக் கண்டத்தில் பல ஆறுகள் கழிவு வடிகால் களாக மாறியுள்ளன.

இத்தகைய பாதிப்புகளை எதிர்நோக்கும் நகரங்களுக்கு உடனடித் தீர்வு எதுவும் தெரிய வில்லை. உயர்ந்துவரும் வாழ்க் கைத் தரத்தின் ஒரு அத்தியாவசிய அம்சமாக மாசடைதல் என்று சில பொருளியல் வல்லுநர்கள் கூறு கின்றார்கள்.

**(ஐ.பி.எஸ். செய்தி)**

**நன்றி: புதிய கல்வி**

### வாழ்வும் கிழமையும்

அமெரிக்க நாட்டின் 16வது குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன் பிறந்தது ஞாயிற்றுக் கிழமை; முதன் முதல் அவர் தேர்தலில் நின்று வெற்றி பெற்றது திங்கட்கிழமை; குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது செவ்வாய்க்கிழமை; பார் கவுன்சிலில் இடம் பெற்றது புதன் கிழமை; உலகம் போற்றும் கெட்டிஸ்பர்க் உரை நிகழ்த்தியது வியாழக்கிழமை; கொலை வெறியனால் நாடக அரங்கில் சுடப்பட்டது வெள்ளிக்கிழமை; அடிமை விலங்கறுத்த அப்பெருந்தலைவனின் உயிர் பிரிந்தது சனிக் கிழமை!

### மிகப்பெரும் கடல்

கடல்களிலேயே மிகவும் பெரியது பசிபிக்பெருங்கடல்; இதன் பரப்பளவு 161/2 கோடி சதுர கிலோ மீட்டர்; உலகப் பரப்பில் இது 35.24 சதவீதம் மொத்த கடற்பரப்பில் 45.7 சதவீதம். இதன் சராசரி ஆழம் 10 ஆயிரத்து 900 மீட்டர்!

### பறக்கும் புறா .

மணிக்கு 80 முதல் 100 கிலோ மீட்டர் வேகம் வரை பறக்கும் சக்தி புறாவுக்கு உண்டு. தொடர்ந்து 15 மணி நேரம் புறாவால் பறக்க முடியும்.

# சுவைமிகு செய்திகள்

### அல்சேசன் பெயர் வரக் காரணம்

ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையே அடிக்கடி ''அல்சேஸ்'' என்ற பகுதியில் தான் போர் நடக்கும். மேலும் இந்த ''அல்சேஸ்'' பகுதியை ஜெர்மானியர்கள் அடிக்கடி கைப்பற்றுவதும், பிரான்ஸ் அதை மீட்பதும் சாதாரணமாக நடக்கும். அல்சேஸ் பகுதி மக்கள் வீரம் செறிந்தவர்கள். ஆகவே அங்கு புதிய நாய்களை ''அல்சேஸ்'' பகுதியை நினைவூட்டும் பொருட்டு ''அல்சேசன்'' என்ற பெயரிட்டு அழைக்கலாயினர்.

### இரத்த ஓட்டம்

நம் உடலில் இரத்த ஓட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை முதன்முதலில் கண்டறிந்து உலகிற்குத் தெரிவித்தவர் மருத்துவமேதை வில்லியம் ஹார்வி என்பவராவார். 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், மன்னர் முதலாம் சார்லசின் குடும்ப வைத்தியராக இருந்த பெருமையாளரும் கூட!

### மிதக்கும் பன்றி

முள்ளம் பன்றியைத் தண்ணீரில் மூழ்கடிக்க முடியாது. ஏனென்றால் அதன் உடலில் உள்ள நீண்ட முட்கள் காற்று நிரம்பியதாகும்; ஆகவே அது தண்ணீரில் மூழ்காது - மிதக்கும்!

### பால் காளான் சிறப்பியல்புகள்

இன்றைய உணவு உற்பத்தியில் காளான் உணவு வகைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. முட்டைக் காளான், சிப்பிக் காளான், பால் காளான், வைக்கோல் காளான், ஆகிய பல தரப்பட்ட காளான்கள் உள்ளன. பால் காளான் எல்லா வகை காளான்களைவிட சுவை மிகுந்ததாகவும், ஊட்டச் சத்து உள்ளதாகவும் விளங்குகிறது. பால் காளானின் உற்பத்தி முறைகளும் எளிதானவை. இதன் உற்பத்திக்கு மற்ற காளான்களைப் போல் மூலப் பொருட்கள் மக்கச்செய்ய வேண்டிய அவசியமில்லை. இதன் உற்பத்திச் சுழற்சி 40 முதல் 50 நாட்கள் வரைதான் ஆகும். விளைதிறன் 140 முதல் 160 சதவிகிதம் ஆகும். தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இக்காளானை வளர்க்கலாம். அறுவடை செய்த காளான்கள் சாதாரன சேமிப்பில் 3-4 நாட்கள் வரை கூட கெடாமல் பாதுகாக்க முடியும்.

### புதினா

கீரைகளில் புதினா கீரைக்குச் சில தனிச் சிறப்புகள் உண்டு; உணவில் தனி மணம் ஊட்டக்கூடிய இந்தக் கீரைக்குப் பித்த மயக்கத்தைப் போக்கும் சக்தி உண்டு. வாய் துர்நாற்றத்தை இது நீக்கும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். பசியைத் தூண்டும். ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு, தியாகிகளின் வாழ்க்கை வரலாறு - இவைகளோடு அரசு ஆற்றிவரும் அரும்பணிகளையும் சேர்த்துச் சுவைபடப் படைத்துவரும் 'தமிழரசு'க்கு அன்பு வாழ்த்துக்கள்.

செ. காமராஜ்,
வேப்பூர் - செக்கடி

'பொய் சொல்ல நல்லதப்பா கதையில் உள்ள குறளில் 'பொய்யையும்' என்றிருக்கிறது; அது 'பொய்ம்மையும்' என்றிருக்க வேண்டும். அதுதான் சரி.

**–புலவர் பெ. ராஜசுந்தரம்,**
திருவேற்காடு

திரையுலகில், பாடல்கள் சீரழிந்து வருகிற நேரத்தில் - பாட்டுப் பிறந்தவிதம்' கட்டுரைமூலம் பட்டுக்கோட்டையாரின் வைரவரிப் பாடல்களை நினைவுபடுத்தினீர்கள். நன்றி.

**–தி. பொ. சண்முகசுந்தரம்,**
திட்டக்குடி.

சிந்தனைச் சிதறல்கள், சுவையுள்ள துணுக்குகள், நூல் நயம் ஆகியவை இன்னும் அதிகம் இடம்பெறவேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக இருக்கிறது எங்கள் ஊர் பிரச்சினை பகுதி. நல்ல மாற்றம்.

**–கடல் நாகராசன்,**
கடலூர்.

'அறிவியல் துளிகள்' பகுதி அற்புதம்; தொடர்ந்து இன்னும் அதிக அளவில் வெளியிடக்கூடாதா?

**–ப. சுரேஷ் பிரபு**
பெருங்கடம்பனூர்.
நாகை வட்டம்.

மருத்துவப் பகுதி - குறிப்பாகத் 'தாய்ப்பால்' கட்டுரை குழந்தைகளுக்கு மட்டுமன்றித் தாய்மார்களுக்கும் பயன்படுவதாகும். இதுபோன்ற கட்டுரைகளை நிறைய எதிர்பார்க்கிறோம்.

**–அ. சூசைமேரி பால்ராஜ்**
மரூர்.

ஆண்ட நாள் ஆண்டு
நீண்ட நம் அரசின்
தமிழரசு இதழின்
தகைமை கண்டேன்;
பக்கந்தோறும்
பைந்தமிழ் ஊற்று
தக்கோர் வழங்கும்
செஞ்சொற் புதையல்;
அரியநற் பேழை
அறிவின் திறவுகோல்!

**–ம. நாராயணன்**
வேலூர்.

'அறிவியல் துளிகள்' பகுதி பயனுடையதாக இருக்கிறது; தகுந்த படங்களுடன் 2 பக்கமாக வெளியிட்டால் நல்லது.

**–இரா. தமிழ் ரகு,**
விழுப்புரம் **– 2**

நச்சிலக்கிய ஏடுகள் ஈசல்போல் பெருகும் நம் நாட்டில், ஒரு தலைசிறந்த நல்லிலக்கிய ஏடாகத் திகழும் தமிழரசு பொன்றாப் புகழ்பூத்த பூந்தமிழ் மலர்போல் மணக்கிறது.

**–புலவர் தமிழறிவன்**
சென்னை - 14

'அன்பு என்பது...' கட்டுரை அன்பின் முக்கியத்துவத்தை விளக்குவதாக இருந்தது; வேலைவாய்ப்புகள்' பகுதியும் மிக அருமை.

**–ஆர். செல்வகுமரன்**
ஊத்தங்கரை.



# குடும்பத் தலைவிகளே!
# நீங்கள் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்துகிறீர்களா
# இதை அவசியம் படியுங்கள்!

- தங்கள் பெயரில் இல்லாத எரிவாயு இணைப்பினைப் பயன்படுத்தும் நுகர்வோர், அந்தந்த எண்ணெய் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு பெயர் மாற்றம் செய்து முறைப்படுத்திக் கொள்ளலாம். உபயோகிப்பாளர் இறக்க நேர்ந்தால் வாரிசு சான்றிதழைக் காட்டி பெயர் மாற்றமும் செய்து கொள்ள முடியும்.
- சிலிண்டரைக் கொண்டு வந்து வீடுகளில் சேர்ப்பவரிடம், சிலிண்டரில் வாயுக் கசிவு ஏதேனும் உள்ளதா என்பதைச் சோதித்துப் பார்க்கச் சொல்ல வேண்டும். சிலிண்டரில் 'சீல்' இருக்கிறதா என்று பாருங்கள்.
- 'சீல்' இல்லாத சிலிண்டரை ஏற்க வேண்டாம். தகுந்த ரசீது இல்லாமல் சிலிண்டரை ஏற்க வேண்டாம். உரிய ரசீது இல்லாமல் சிலிண்டர் அல்லது ரெகுலேட்டரை யாருக்கும் இரவல் கூட கொடுக்காதீர்கள். அது பிறகு பல பிரச்சினைகளை உண்டு பண்ணலாம்.
- அவரவர் வீடுகள், உணவு விடுதிகளில் உள்ள சமையல் எரிவாயு சாதனங்களை காப்பீடு செய்வது நல்லது.
- இரப்பர் இணைப்புகள் வாங்கும்போது, தரமானதுதானா என்று கவனித்து வாங்கவேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இரப்பர் இணைப்புகளைக் கட்டாயமாக மாற்ற வேண்டும்.
- இரண்டு ஆண்டுகளக்கு ஒருமுறை 10 ரூபாய் எரிவாயு விநியோகஸ்தரிடம் செலுத்தி அடுப்புச் சாதனத்தை முழுமையாகப் பரிசோதிக்க வேண்டும்.
- இரவில் படுக்குமுன் ரெகுலேட்டர், பர்னர் குமிழ் ஆகியவற்றை மூடிவிட்டீர்களா என்று கவனிக்க வேண்டும்.
- சிலிண்டரை எப்போதும் செங்குத்தாக நிற்கவைக்க வேண்டும். தனியாக உள்ள மாற்று சிலிண்டரின் வால்வினைப் பாதுகாப்பு முறையால் எப்போதும் மூடி வைக்கவேண்டும்.
- சிலிண்டரின் மீது பாத்திரம், துணிகள் போன்றவற்றை வைக்கவேண்டாம். சிலிண்டரின் அருகில் வேறு அடுப்பு எதையும் வைக்காதீர்.
- டெபாசிட் கட்டிய ரசீது காணாமல் போய்விட்டதா? வேறு இடத்திற்குச் செல்ல நேரிடும்போது காணாமல் போன ரசீதிற்குப் பதில் ரூ.10 ஸ்டாம்ப் பத்திரத்தில் எழுதித் தந்தால் போதுமானது. கட்டிய பணத்தைத் திரும்பப் பெறலாம்.
- நகரத்திற்குள்ளேயே வீடு மாறுகின்றபோது, சிலிண்டர், ரெகுலேட்டரைத் திருப்பித் தர வேண்டியதில்லை. ஆனால், டிடிவி எனப்படும் ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள். டெபாசிட் செலுத்திய ரசீதைத் திருப்பித் தரவேண்டும்.
- ரெகுலேட்டர் இயற்கையாகவே பழுதுபட்டால் அல்லது இயங்காவிட்டால் எரிவாயு விநியோகஸ்தர் மெக்கானிக் இலவசமாக மாற்றித் தருவார்கள். ஆனால் உடைந்து பழுதுபட்டால், வி.ஆர். எனப்படும் ரசீது மூலம் 150 ரூபாய் கட்டவேண்டும்.
- எரிவாயு அடுப்புச் சாதனங்களை நீங்களாகவே ஒரு போதும் பழுதுபார்க்க முயற்சிக்காதீர். விநியோகஸ்தர் அலுவலகத்தில் உள்ள மெக்கானிக் மூலமே சீர் செய்து கொள்ள வேண்டும்.
- இந்த விதிமுறைகளை அகில இந்திய சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பின் தென்பிராந்தியம் வெளியிட்டுள்ளது.




### பிரச்சினை

**செ**ங்கோட்டை காலாங்கரை அருகிலுள்ள சுடுகாட்டுப் பாதையில் ஊரில் எடுக்கப்படும் குப்பைகளைக் கொண்டு வந்து குவித்துப் போக்குவரத்தைப் பாதிக்கச் செய்கின்றனர். மழைக்காலங்களில் இந்தக் குப்பைகள் நீராடும் ஆற்றில் கலந்து குளிப்பதற்குக்கூட சுகாதாரக்கேடு உண்டாகிறது. செங்கோட்டை ஆறுமுகசாமி ஒடுக்கம் என்கிற பகுதியிலுள்ள சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையின் கரைகளில் தடுப்புச் சுவர்களில் காங்கிரீட் சாலை போட்டால்தான் இதற்கு நிரந்தரமான வழி பிறக்கும்.

செங்கோட்டை நித்யகல்யாணி அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சுடுகாட்டுப்பாதையில் முட்செடிகள், இறந்த உடலைத் தூக்கிச் செல்ல முடியாமல் தடுக்கின்றன. மழைக்காலங்களில் களிமண் கூடுதலாக உள்ள காரணத்தினாலும் முட்செடிகள் மறைப்பதாலும் வழுக்கு ஏற்பட்ட இடங்கள் தெரியாமல் இறந்த உடலைத் தூக்கிச் செல்பவர்களும் கீழே விழும் அபாயம் உள்ளது. மேலும் பாதையின் அருகில் உள்ள தனி நபர்கள் பாதையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் ஆக்கிரமித்துள்ளனர். எனவே ஆக்கிரமிப்புகளை அகற்றவும் சுடுகாட்டுப்பாதையினைச் செப்பனிடவும், செங்கோட்டைப்புதூர் பேரூராட்சி நிர்வாக அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**ந. நாராயணன்,**
செங்கோட்டை.

### தீர்வு

**க**டிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் உள்ள சுடுகாடு சமீபம் உள்ள ஆற்றில் குப்பைகளைக் கொட்டுவதில்லை என்றும், அவ்வாறு கொட்டப்பட்டக் குப்பைகளைத் தற்போது அகற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தென்காசி செங்கோட்டை சாலையில் குண்டாறு சமீபம் உள்ள ஆறுமுகசாமி ஒடுக்கம் பக்கம் உள்ள சுடுகாட்டின் பாதைக்கு இரு பக்கமும் தடுப்புச்சுவர் கட்டி தளம் அமைக்கும் பணிக்காக ரூ. 3,70,000/- (ரூபாய் மூன்று லட்சத்து எழுபது ஆயிரம்) மதிப்பீடு தயார் செய்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் நித்திய கல்யாணி கோவில் பக்கம் உள்ள பிராமணர் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதல்ல. மேற்படி பாதை புதூர் பஞ்சாயத்தைச் சார்ந்ததாகும் என்ற விபரத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செல்வி. இரா. பூங்கொடி அருமைக்கண். பி.இ.**
**ஆணையர், செங்கோட்டை நகராட்சி.**

### வாய்க்குள் வளரும் தவளைக் குஞ்சு

தென் அமெரிக்காவில் டார்வின் தவளை எனப்படும் ஒரு வகையுள்ளது. சதுப்பு நிலத்தில் இடப்பட்ட முட்டைகளை ஆண் காவல் காக்கிறது. முட்டைகளில் உயிரின் அசைவு தோன்றியதும் அவற்றை எடுத்து விழுங்கி தன் வாயில் உள்ள பையில் வைத்துக்கொள்கிறது. முட்டை பொரிந்து குஞ்சு வெளிப்படும் வரை, அவற்றை வாய்க்குள் வைத்திருந்து பிறகு அவற்றை வெளியேவிடுகிறது.

## பிரச்சினை

**நா**ன் கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், குளித்தலை வட்டம், ஆதனூர் கிராமம், மந்திரிக்கோன்பட்டியில் வசிக்கிறேன். எங்கள் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப் பட்டவர்கள் ஒருங்கே பலநூறு குடும்பங்கள் தண்ணீர் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ளோம். நாங்கள் தண்ணீருக்காக 1 கி.மீ. மணலிலேயே நடந்து சென்று தனியார் கிணறுகளில் பல பிரச்சினைகளுக்கிடையில் நீர் கொண்டு வருகின்றோம். எங்கள் ஊரில் உள்ள அடி குழாயிலும், உப்புநீர்தான். இருப்பினும் அதிலிருந்து தினமும் 50 குடம் தண்ணீர்தான் கிடைக்கிறது. பின் வறண்டுவிடும். இது தொடர்பாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாக முதல்வர் ஆட்சியர், ஆணையர் வட்டாட்சியர், மக்கள் பிரதிநிதிகள் அனைவரிடமும் மனுகொடுத்து எங்கள் முறையீடு பயனளிக்கவில்லை. உங்கள் மூலமாவது எங்கள் பிரச்சினை தீர்க்கப்படுமா?

**ம. மணியன்,**
மந்திரிக்கோன்பட்டி, ஆதனூர் தரகம்பட்டி (வழி)
குளித்தலை வட்டம்.

## தீர்வு

**க**டவூர் ஊராட்சி ஒன்றியம் ஆதனூர் ஊராட்சி மந்திரி கோன்பட்டியில் ஆதி திராவிடர் தெருவில் ஏற்கனவே ஒரு கைப்பம்பு போடப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகிறது. கைப்பம்புக்குப் போதுமான தண்ணீர் உள்ளது. ஊருக்கு அருகில் கைப்பம்பு போடப்பட்டுள்ளது.

மேலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 1995-96ம் ஆண்டிற்குப் புதிய ஆழ்குழாய் கிணறு ஒன்று பொதுவாக போடப்பட்டுள்ளது. மேலும் மந்திரிகோன்பட்டியில் மொத்தம் 4 கைப்பம்புகள் உள்ளன. அதில் ஒன்று ஆதி திராவிடர்களுக்காகப் போடப்பட்டது. மந்திரி கோன்பட்டியில் குடியிருக்கும் மக்களுக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ. அம்மையப்பன் ஆணையர்,**
கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரகம்பட்டி

---

## பிரச்சினை

**ம**துரையிலிருந்து திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மார்நாடு, தஞ்சாக்கூர், கட்டனூர், இருஞ்சிறை, நரிக்குடி வீரசோழன், கூடக்குளம் மண்டல மாணிக்கம், வலையபூக்குளம் வழியாக கமுதிக்கு நீண்ட நாட்களாக மருதுபாண்டியர் போக்கு வரத்துக்கழகப் பேருந்து மதுரை எம்.பி.டி.சி. கிளை மூலம் காலை 5.45க்கும், மாலை 1.30 க்கும் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 10 மாதங்களாகக் குறிப்பிட்ட நேரத்துக்கு வருவதில்லை. இதனால் பொதுமக்களும், மாணவ, மாணவியர்களும், கர்ப்பிணி தாய்மார்களும், அரசு அலுவலகங்களுக்குச் செல்பவர்களும் குறிப்பிட்ட நேரத்துக்குப் போக முடியாமல் பெரும் அவதிப்படுவது மிகவும் வேதனை. இது குறித்து எம்.பி.டி.சி. நிர்வாக இயக்குநர், கோட்ட மேலாளர், மதுரை எம்.பி.டி.சி. கிளை மேலாளர் ஆகியோருக்குப் பலமுறை விண்ணப்பித்தும் எவ்விதப் பலனும் இல்லை. பேருந்தை நிறுத்தினாலும்கூட, மண்டல மாணிக்கம் நடந்து போய், பேருந்தில் பயணம் செய்து கமுதி செல்லலாம். இப்பேருந்தை நம்பி கடந்த 10 மாதமாக எங்கள் ஊர் பொது மக்கள்படும் கஷ்டத்திற்கு, அளவில்லை. எனவே கூடக்குளம் வழியாக காலை 8.30 மணிக்கு வேருந்து தொடர்ந்து வருவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து உதவும்படி எங்கள் ஊர் பொது மக்கள் சார்பாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**வீ.மு. இராமசாமி,**
அவைத்தலைவர், தி.முஇக உட்கிளை, கூடக்குளம்,
கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

## தீர்வு

**மே**லே கண்ட வழித்தடத்தில், மழையின் காரணமாகச் சாலை மோசமாக இருந்ததால் மதுரை-கமுதி (வழி) கட்டனூர், வீரசோழன் பேருந்து சரிவர இயக்கப்படவில்லை. தற்சமயம் மேற்படி வழித்தடத்தில் பேருந்து தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பொதுமேலாளர்,**
மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி.

## ஸ்குவிட்

*முதுகெலும்பில்லாத உயிரினங்களில் கடலின் அடி மட்டத்தில் வாழும் 'ஸ்குவிட்' தான் பெரியது. இது எவ்வளவு பெரிதாக வளரக்கூடியது என்பதை நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. எப்போதாவது நீர்மட்டத்துக்கு வரும் ஒரு சிலவற்றைக் கொண்டு இவற்றின் அளவை யூகிக்கத்தான் முடிகிறது. நியூஜிலாந்து கடற்கரையருகே காணப்பட்ட ஒன்று 21 மீட்டர் நீளமிருந்ததாக சொல்லப்படுகிறது. இதன் எடை ஒரு டன்னுக்கு மேல் இருக்கும். கண்களின் அகலம் ஒன்றே கால் அடி. இவ்வளவு பெரிய கண் கொண்ட எந்த உயிரினமும் கிடையாது என்று கூறப்படுகிறது.*

## பிரச்சினை

**த**மிழக அரசு நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகம் செங்கோட்டை நகரின் மையப் பகுதியில் சுமார் 1000 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பொதிகை வாசகர் பேரவையினரின் இடைவிடாத முயற்சியால் அடைத்தே இருந்த நூலகத்தை நெல்லை மாவட்ட நூலக அதிகாரி அவர்கள் ஒரு உதவி நூலகரை நியமனம் செய்து நூலகம் செயல்பட உதவினார்கள். ஆனால் தற்போது மீண்டும் சுமார் 20 நாட்களாக நூலகம் யாருக்கும் பயனின்றி அடைத்தே உள்ளது. எனவே, செங்கோட்டை பொது நூலகம் தினசரி சிறந்த முறையில் செயல்பட உதவும்படி தங்களிடம் மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.எஸ். ராமநாதன்,**
பொதிகை வாசகர் பேரவை, செங்கோட்டை .

## தீர்வு

**த**ங்களின் கடிதத்தில் செங்கோட்டைப் பொது நூலகம் 20 நாட்களாக மூடப்பட்டிருப்பதாகவும் இதனைத் திறக்க, தக்க நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கக் கோரப்பட்டுள்ளது.

செங்கோட்டை கிளை நூலகத்தில், அதில் பணி புரிந்த நூலகர் மாறுதல் மூலம் நான்குநேரி கிளை நூலகத்திற்கு சென்றுவிட்டதாலும், மற்றும் அதில் பணி புரிந்த உதவியாளர் வயது முதிர்வில் ஓய்வு பெற்றுவிட்டதாலும், ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக புகார் எழுந்துள்ளது.

இந்நூலகத்தினைத் தினசரி நன்கு செயல்படத்தக்க வகையில், தென்காசி கிளைநூலகத்திலிருந்து பணியாளர் ஒருவர் செங்கோட்டை கிளைநூலகத்திற்கு மாற்றுப்பணியில் செயல்பட்டு வருகிறார்.

இந்நூலகத்தின் மீது நேரடி கவனம் செலுத்தி ஒரு பணியாளரை நிரந்தரமாக மாற்றுப்பணி / மாறுதல் மூலம் நியமிக்கத்தக்க வகையில், மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதுடன், தொலைபேசி வாயிலாகவும் தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**இரா. கண்ணன்,** எம்.ஏ.பி.எட்.,
பொது நூலக இயக்குநர், சென்னை.

## பிரச்சினை

**எ**ங்கள் கிராமத்தில் 1946ல் அண்ணல் காந்தி அவர்களால் ஒரு ஆரம்பப் பள்ளி திறக்கப்பட்டது. அது வளர்ந்து நடுநிலைப்பள்ளியாகவே நின்று விட்டது. எனவே, அப்பள்ளியை ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றி எங்கள் கிராமப்பெண்கள் உயர் கல்வி பெற வழி வகை செய்யவும், எங்கள் கிராமத்திற்கு அருகில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி இல்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர். சுரிவரதன்,**
கொடிமா, கூட்டேரிப்பட்டு, திண்டிவனம் வட்டம்.

## தீர்வு

**வி**ழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கொடிமா கிராமத்திலுள்ள நடுநிலைப்பள்ளியை 96-97ம் கல்வியாண்டில் மகளிர் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துக்கள் ஏதும் உரிய வழியாக இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை என்றும், வரும் கல்வியாண்டில் (97-98) இப்பள்ளியை மகளிர் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துருக்கள் உரிய வழியாக உரிய காலத்தில் பெறப்படின், அதனை விதிமுறைகளின்படி பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பள்ளிக்கல்வி இயக்குநர்,** சென்னை - 6.

## பிரச்சினை

**நா**ங்கள் கடந்த 28.4.1992 முதல் நான்கு வருடங்களாக நொண்டிமேடில் ஒரு நியாயவிலைக்கடை அமைத்துக் கொடுக்கும்படி அரசைக் கேட்டு வருகிறோம். ஆனால் இதுவரை நியாயவிலைக்கடை அமைத்துக் கொடுக்கப் படவில்லை. இப்பகுதியில் உள்ள 901 குடும்ப அட்டை தாரர்களின் விவரங்களைக் கொடுத்தும் இதுநாள் வரையில் நியாயவிலைக் கடை அமைத்துத் தரப்படவில்லை. தற்சமயம் புழக்கத்தில் உள்ள குடும்ப கார்டுகளின் எண்ணிக்கை 12000. எனவே தாங்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி எங்கள் பகுதிக்கு ஒரு நியாயவிலைக்கடை அமைக்க உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆ. கிருஷ்ணமூர்த்தி,**
உபதலைவர்,பொதுநல சங்கம், நொண்டிமேடு,
உதகமண்டலம்.

## வில்வப் பழத்துடன் திருமணம்

அரசின் மதமாக இந்து மதத்தைக் கொண்டுள்ள ஒரே நாடு நேபாளம் ஆகும். அங்கே மூவாயிரம் ஆலயங்களுக்குமேல் உண்டு. அங்குள்ள மக்களில் நேவார் எனப்படும் ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களிடையே ஒரு வினோத பழக்கம் இருந்து வருகிறது அதாவது ஒரு பெண் பருவமடைவதற்கு முன் அவளுக்கும் ஒரு வில்வப் பழத்துக்கும் சடங்குகளுடன் மணம் செய்து வைப்பது இவர்களது வழக்கம். இப்பழத்தைக் கவனமாகப் பாதுகாத்து வருவார்கள். பின்னரே வேறொரு ஆணுடன் அவள் திருமணம் நடக்கும். விவாகரத்துப் பெற விரும்பும் பெண் கணவனுடைய தலையணைக் கடியில் வெற்றிலைப் பாக்கை வைத்து விட்டால் போதும், அவள் வேறு ஒருவனை மணக்கலாம்!

## பிரச்சினை

விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் பெரியபகண்டை கிராமத்தில் பல ஆண்டுகளாக மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி கேட்டு மனு செய்து வருகின்றோம். 1995ல் மே மாதம் மாவட்ட ஆட்சித்தலைவரின் மனுநீதி நாள் அன்றும் மனு கொடுக்கப்பட்டது. இதுநாள் வரை திட்டம் துவக்கப்படவில்லை. திட்டம் துவக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**கோ. பாலசுப்பிரமணியன்,**
பெரியபகண்டை, ரிஷிவந்தியம் ஒன்றியம்.

## தீர்வு

பெரியபகண்டை ஊராட்சியில் தற்போது, இயங்கிவரும் கைப்பம்புகள் - 4 இவ்வூராட்சியின் ஆதி திராவிடர் காலனி பகுதியில் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி நன்கு இயங்கி வருகிறது.

மேலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு விதிமுறைகளின் படி போதுமான மக்கட் தொகை, வருமானம் இவ்வூராட்சியில் இல்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும் என்பதால் விவரங்கள் திருக்கோவிலூர் நகரில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வாரிய அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எல். சீனுவாசன்,**
**ஆணையாளர்**
**ஊராட்சி ஒன்றியம், ரிஷிவந்தியம்**

## பிரச்சினை

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி நகரம் பரமக்குடி, எமனேஸ்வரம் என இரு பிரிவாக உள்ளது. இதனைப் பிரிக்கும் வைகை ஆற்றின் கிழக்குப் பகுதியில் ஒரு தரைப்பாலம் கட்டப்பட்டு 60 சதம் வேலை முடிக்கப்பட்டு, மீதமுள்ள வேலைகள் முடிக்கப்படாமல் அரைகுறையாக உள்ளன. இரு பகுதி மக்களும் சுட்டெரிக்கும் வெயிலில் மணலில் வைகை ஆற்றைக் கடந்து செல்ல மிகவும் அவதிப்படுகிறார்கள். புதிதாக அமைந்துள்ள கலைஞரின் அரசு மேற்படி பால வேலைகள் விரைவாக முடித்துத்தர பரமக்குடி நகர மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையின் கவனம் நகர மக்களின் குறையைத் தீர்க்க உதவுமாறு கேட்கிறேன்.

**எம்.எஸ். ராமய்யன்,**
பெருமாள் கோவில் தெரு,பரமக்குடி.

## தீர்வு

வைகை ஆற்றின் குறுக்கே பரமக்குடியையும் எமனேஸ்வரத்தையும் இணைக்கும் தாம்போதி கட்டும் வேலை பகுதி 2 திட்டம் (91-92) தின் கீழ் அரசு ஆணை எண். *1786*/பொ.ப.து. நாள் *29.10.91* ரூ. *61.00* இலட்சங்களுக்கு நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு ரூ. *67.10* லட்சங்களுக்குத் தலைமைப் பொறியாளர் (நெஊபது) சென்னை அவர்களால் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

எமனேஸ்வரம் பக்கத்தில் 6 கண்களும் பரமக்குடி பக்கத்தில் *10* கண்களும் கொண்ட தாம்போதி வேலை தற்சமயம் 70 சதவிகிதம் வேலை முடிவுறப்பெற்றுள்ளது. மீதி வேலை நடைபெறும் பகுதியில் காங்க்ரீட் வேலைகளுக்குப் போதுமான அளவு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே வேலை முன்னேற்றத்தில் தடை ஏற்பட்டுள்ளது.

நிலைமை சீரடைந்ததும் பால வேலை துரிதமாக நடைபெற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் செய்து முடிக்கப்பட்டுப் பொதுமக்களுக்குப் பயன்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**ஜி. ஜெயராமன்,**
**கோட்டப்பொறியாளர் (நெஊபது), பரமக்குடி.**

## அட்டையின் விசித்திரம்

அட்டைகள் மண்புழு இனத்தைச் சேர்ந்தவை. இவைகளுக்குச் சில விசித்திர இயல்புகள் உள்ளன, அதன் உடலின் இரு புறமுள்ள உறிஞ்சிகள் இருக்கும். முன்புற முள்ள உறிஞ்சியின் நடுவில் அதன் வாய் இருக்கும். கூரிய பற்களைக் கொண்ட அதன் மூன்று தாடைகளால் கடித்து வடிவில் காயத்தை உண்டாக்கும். அதன் உமிழ்நீரில் உள்ள ஒரு ரசாயனம் காயம்பட்ட இடத்தில் வலி தெரியாமல் செய்வதால் கடிபட்ட விலங்கு அதை உணர்வதில்லை. அவை சுரக்கும் மற்றொரு பொருள் இரத்தம் கட்டிப் போகாமல் தடுக்கிறது. இதனால் நிம்மதியாக வேண்டிய அளவு இரத்தத்தைப் பாதிக்கப்பட்டவர் உணராமலே அதனால் உறிஞ்சிக் குடிக்க முடிகிறது.

# சளி - இருமல்

**மழைக்காலங்களில் பொதுவாக குழந்தைகளுக்கு சளி-இருமல் போன்ற தொல்லைகள் இருக்கக்கூடும். இவைகளிலிருந்து தற்காத்திட இந்தக்கட்டுரையில் சொல்லப்பட்ட தகவல்கள் தாய்மார்களுக்கு உதவும்.**

**இருமலும் சளியும் உள்ள குழந்தை, இயல்பான நிலையிலும் பார்க்க மிகவும் விரைவாக மூச்சுவிடுமானால், அது ஆபத்திலிருக்கிறது - அபாயநிலையில் இருக்கிறது எனப் பொருள். உடனே மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லுவது அவசியம்.**

❒ பெரும்பாலும் சளியோ, இருமலோ, தொண்டைக் கரகரப்போ, மூக்கில் சளி ஒழுகுதலோ தாமாகவே சரியாகி விடுபவைதான். ஆனால் சில சமயங்களில் இவை முற்றி நிமோனியாவாக உருவெடுத்து, குழந்தையின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கின்ற அபாய சூழ்நிலை தோன்றலாம். **ஆனால், பெற்றோர் கீழ்க் காணுபவைகளைக் கவனமாகக் கடைப்பிடிப்பார்களானால் நிமோனியாவால் ஏற்படும் இலட்சக் கணக்கான இறப்புக்களைத் தவிர்த்திட வாய்ப்பு உண்டு.**



❒ **மருத்துவக் கவனிப்பு தேவைப்படுகிற அளவுக்கு, சளி-இருமல் எப்போதும் தொற்று நோயாக முற்றுகிறது என்பதைப் பெற்றோர் தெரிந்திருக்க வேண்டும்.**

❒ மருத்துவ உதவியும், குறைந்த செலவிலேயே மருந்துகளும் கிடைக்கின்றன. அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாகவே கிடைக்கின்றன.

சளி - இருமல் உள்ள குழந்தைகளின் பெற்றோர், கீழ்க்காணும் நிலைகளில், மருத்துவ மனைக்கோ, அல்லது நலப்பணியாளரிடமோ குழந்தைகளை உடனே அழைத்துச் செல்ல வேண்டும்.

❒ **இயல்பு நிலையிலிருந்து வேகமாக குழந்தை மூச்சு விடும்போது,**

❒ **குழந்தையின் மார்பின் கீழ்ப்பகுதி (விலா எலும்புகளுக்கு இடைப்பட்ட பகுதி) மூச்சு விடும்போது, சாதாரணமாக வெளியே விரிவதற்குப் பதிலாக உள்நோக்கிப் போகும் போது.**

❒ **குழந்தையால் எதுவும் குடிக்க முடியாத நிலை ஏற்படும்போது, திரவ உணவும் உறிஞ்ச முடியாத நிலை ஏற்படுகிற போது.**

❒ **குழந்தை இயல்பாக மூச்சு விடும்போது பயப்பட வேண்டியதில்லை. சாதாரணமாக**

வீட்டிலேயே சளி, இருமலை குணமாக்கி விடலாம். மூக்கிலே சளி ஒழுகிக் கொண்டிருந்தாலும் மருந்து இல்லாமலேயே குணமாகிவிடும். சளி, இருமலுக்கு என ஏராளமான மருந்துகள் விற்கப்படுகின்றன. இவைகளால் சளி, இருமல் குணமாகி விடும் என மக்கள் நம்புகின்றனர். சளி-இருமலுக்கு விசேஷமான மருந்துகள் எதுவும் தேவையு மில்லை. இதற்கென விற்கப்படும் மருந்து களில் பல பயனற்றவை. மேலும் சொல்லப் போனால் ஊறு விளைவிப்பவைகளாகவும் இருக்கின்றன.

**குறைந்தபட்சம், முதல் நான்கு மாதங்களுக்கேனும் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். நன்றாக ஊட்டச்சத்தும் கொடுத்து, உரிய தடுப்பு ஊசிகளும் போடப்படுமானால் குழந்தைகளுக்கு நிமோனியா வராது.**



### ❐ தாய்ப்பால்

தாய்ப்பால், தொற்று நோய் வராது பாதுகாக்கிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தையைவிட, புட்டிப்பால் குடிக்கும் குழந்தைக்கு நிமோனியா வரும் அபாயம் இருமடங்கு உள்ளது. குறிப்பாக, முதல் நான்கு மாதங்களுக்குத் தாய்ப்பாலை மட்டுமே தருவது அவசியம். இதர பால் தரவேண்டாம்.

### ❐ உணவு

வயது எதுவானாலும் நன்றாக ஊட்டச் சத்து உணவை வழங்குங்கள். நன்றாக போஷாக் குப் பெறும் குழந்தை இலகுவாக நிமோனி யாவால் பாதிக்கப்படவோ, இறக்கவோ மாட்டாது. ஊட்டச்சத்து உடலில் வலுவை ஏற்றி, நோய்க் கிருமிகளால் பாதிப்பு ஏற்படாமல் செய்யும்.

### ❐ வைட்டமின் -ஏ

பப்பாளி, மாம்பழம் போன்ற மஞ்சள் நிறப் பழவகைகள், கீரைகள், கேரட், பச்சை இலைக் காய்கறிகளைச் சாப்பிடச் செய்யுங்கள். இவைகளில் நிமோனியாவி லிருந்து பாதுகாக்க உதவும் வைட்டமின்-ஏ உயிர்ச்சத்து நிரம்ப உள்ளது.

### ❐ தடுப்பு ஊசிகள்

குழந்தைக்கு ஓராண்டு முடிவதற்குள், போட வேண்டிய அனைத்துத் தடுப்பு ஊசிகளும் - சொட்டு மருந்தும் முழுமையாகப் போடப்பட வேண்டும். பொதுவாகக் குழந்தைகளைப் பாதிக்கின்ற நோய்களான கக்குவான், காசநோய், தட்டம்மை போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைத் தடுப்பு ஊசிகள் பாதுகாக்கின்றன.

### ❐ ஜன நெருக்கம்

ஜனநெரிசல், சளி-இருமல் பரவுவதற்குக் காரணமாகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளை மட்டுமே, இரவில் தாயோடு தூங்க அனுமதிக்கலாம். ஏனைய சிறார்கள் தனித்தனிப் படுக்கையில் தூங்க உற்சாகப்படுத்த வேண்டும்.

**சளி-இருமல் உள்ள குழந்தைகள் உணவு உட்கொள்ள சங்கடப்படக்கூடும். அவர்கள் சாப்பிட நாம் உதவ வேண்டும். திரவ ஆகாரங்களை நிறையப் பருகச் செய்ய வேண்டும். பட்டினியால் வாட விடக்கூடாது.**

❐ குழந்தைகளை இல்லத்தில் வைத்துப் பராமரிக்கும்போது நினைவிற் கொள்ள வேண்டியவை.

## ❐ தொடர்ந்து உணவளித்தல்

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்குச் சளி-இருமல் கண்டால், சாப்பிடுவதற்குக் குழந்தை சங்கடப்படும். சாப்பிடக் கஷ்டப்படுகிறது என்பதனால் உணவு கொடுக்காமல் இருக்கக்கூடாது. உணவு குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகிறது; தொற்று நோயை எதிர்த்துப் பாதுகாக்கிறது. எனவே வற்புறுத்தியாவது, அடிக்கடி தாய்ப்பால் கொடுக்க முயற்சிக்க வேண்டும். சளி, மூக்கடைப்பை ஏற்படுத்தும் எனவே மூக்கடைப்பை நீக்கி விட்டால் குழந்தை சுலபமாக உறிஞ்சிக் குடிக்கும். சப்பிக் குடிக்க கஷ்டப்படுமானால், பாலைப் பீய்ச்சி, சுத்தமான கிண்ணத்திலோ, பாலடையிலோ ஊற்றிக் கொடுக்கலாம்.

தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளாயின், கொஞ்சம் கொஞ்சமாக,அடிக்கடி சாப்பிட வைக்கலாம். நோயுற்ற காலத்தில் பட்டினி போடக்கூடாது. இது குழந்தையின் வளர்ச்சிக் குறைவுக்கு முக்கிய காரணமாகிவிடும். நோய் குணமான பின், குறைந்தபட்சம் ஒரு வாரமாவது, கூடுதலாக ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு கொடுக்க வேண்டும். இது நோய்வாய்ப்பட்ட காலத்தில் இழந்த சக்தியை ஈடுசெய்ய உதவும். நோயுறுமுன் என்ன எடை இருந்ததோ, அந்த அளவேனும் எடை கூட வேண்டும். முன்னர் போலவே சுறுசுறுப்பாக விளையாடத் துவங்க வேண்டும். அப்போது தான் குழந்தை பூரண குணம் பெற்றுள்ளது என்று பொருள்.

## ❐ திரவ உணவு ஏராளமாகக் கொடுங்கள்

தண்ணீர் கொடுத்தால் சளி அதிகமாகிவிடும்; இருமல் வரும் என்றெல்லாம் நம்பிக் கொண்டிருக்கின்ற நிலையை மாற்றி, சளி-இருமல் இருந்தாலும் திரவ உணவு வகைகளை நிறையக் கொடுத்து வர வேண்டும்.

**சளி-இருமல் உள்ள குழந்தைகளை வெதுவெதுப்பாக வைத்திருங்கள். ஆனால் அதிக சூட்டில் வைக்க வேண்டியதில்லை. தூய்மையான - புகையற்ற காற்றைச் சுவாசிக்கச் செய்யுங்கள்.**

## ❐ வெதுவெதுப்பாக - சூடாக அல்ல

குழந்தைகளும், சிறார்களும் தங்களது உடல் சூட்டை எளிதாக இழந்து விடுவார்கள். அதனால் அவர்களுக்கு வெதுவெதுப்பான உடை அணிவிப்பது அவசியம். அதற்காக அதிக சூட்டை உண்டாக்கக்கூடிய ஆடைகள் தேவையில்லை. இறுக்கிப் போர்த்த வேண்டியதுமில்லை.

காய்ச்சல் என்பது கடுமையான நோயின்



அறிகுறி அல்ல. ஆனால், காய்ச்சல் வரும்போது பாரசிட்டமால் அல்லது காய்ச்சலைத் தணிக்கும் மாத்திரையைத் தருவதில் தவறில்லை.

### ❒ சுவாசிக்க உதவுங்கள்

சளி பிடித்தால் மூக்கடைப்பு ஏற்படுவதுண்டு. அடிக்கடி மூக்கடைப்பை நீக்குங்கள். குறிப்பாகத் தாய்ப்பால் குடிக்கும் போதும், தூங்கவைக்கும் முன்பும் மூக்கடைப்பை நீக்குங்கள். குப்புறப் படுக்க வைத்து தூங்கச் செய்யலாம். சுலபமாகச் சுவாசிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும். மிதமான சுடுநீரின் ஆவி பிடிப்பதன் மூலமும் மூக்கடைப்பு நீங்கும். கொதிக்கிற நீரை உபயோகிக்காதீர்கள்.

குழந்தை தூங்கும் அறையின் ஜன்னல்கள், கதவுகளை நன்றாகத் திறந்து வையுங்கள். காற்று வரும் வாயில்களை அடைத்து வைக்காதீர்கள். பசுமையான காற்றில் பச்சிளம் குழந்தை நன்றாகத் தூங்கும். காற்றோட்டமுள்ள இடத்தில் படுக்க வைப்பதே நல்லது. ஆனால் சளி-இருமல் உள்ள குழந்தையை அதிகக்காற்று வீச்சுள்ள இடத்தில் வைத்திருத்தல் நல்லதல்ல.


### ❒ தூய காற்று

புகை சூழ்ந்த சூழலில் குழந்தைகள் வசிப்பதும், தூங்குவதும் கூடாது. இத்தகைய சூழலில் வாழும் குழந்தைகளுக்கு நிமோனியா வரும் வாய்ப்பு அதிகம். பீடி-சிகரெட் புகையை சுவாசிக்கும் குழந்தையின் ஆரோக்கியம் நாளடைவில் பாதிப்புக்குள்ளாகும். சமையல் புகை (அடுப்புப் புகை), பீடி - சிகரெட் புகையோ இல்லாத இடத்தில் குழந்தைகளை வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகள் நடமாடும் இடங்களில் எச்சில் துப்புவது, இருமுவது, தும்முவது போன்றவையும் கூடாது. இவை குழந்தைகளின் ஆரோக்கியத்திற்குக் கெடுதல் விளைவிக்கலாம். சளி-இருமல் கண்ட பெரியவர்கள், குழந்தைகளிடமிருந்து தனித்திருப்பது நல்லது. இது குழந்தைகளுக்கு நோய் பீடிக்காமல் தடுக்க உதவும்.

oOo

## பூமிக்கடியில் ஓடும் புகை வண்டிகள்



பூமிக்கடியில் ஓடும் ரயில் முதன்முதலில் 1863-ல் லண்டன் நகரத்தில்தான் பயன்படுத்தப்பட்டது. பாடிங்டன் - லண்டன் நகரங்களுக்கிடையே ஓடிய இந்த ரயில் நீராவி எந்திரம் கொண்டது. புகை வெளியேற ஆங்காங்கே பூமியின் மேல் மட்டத்தில் திறப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. 1890–இல், மின்சார எந்திரம் பொருத்தப்பட்ட வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்காகப் புதிய ரயில்பாதைகள் தேம்ஸ் நதிக்குக் கீழே போடப்பட்டன. பூமிக்கடியில் ஓடும் ரயில்களில் அதிகம்பேர் பயணம் செய்வது மாஸ்கோவில்தான். இது 22 நிலையங்களைக்கொண்டது. இந்த ரயில் பாதையில் தினசரி 65 இலட்சம் பேர் பயணம் செய்கின்றனர். லண்டனில் உள்ள பூமிக்கடியில் ஓடும் ரயில்பாதைதான் உலகிலேயே மிகவும் நீளமானதாகும். இது 418 கி.மீ நீளம் உடையது. 277 நிலையங்களைக் கொண்டுள்ளது. நியூயார்க்கில் உள்ள பூமிக்கடியில் ஓடும் ரயில்பாதையில் 458 நிலையங்கள் உள்ளன. இந்தியாவில் கல்கத்தாவில் மட்டுமே பூமிக்கடியில் ஓடும் இத்தகைய ரயில் வசதிகள் உள்ளன.

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

சென்னை மாநகருக்குட்பட்ட பகுதி களுக்கு, சென்னை மாநகர அடிப்படை வசதிகள் 'மேம்பாட்டுக் கழகம்' மூலமாக நிதி உதவி பெற ரூபாய் ஐம்பது கோடி இந்த மேம்பாட்டுக் கழகத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிகள், நகராட்சிகள் அடிப்படை வசதிகளை உயர்த் துவதற்கு வசதியாக நிதி தேவை பற்றிய செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தேவையின் அடிப்படையிலும், மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான நிதி உதவிகளை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் சொத்து வரிதான் நிதி




நிலையை உயர்த்துவதற்கான முதன்மை வரியாகும். பல உள்ளாட்சி நிறுவனங்களில் சொத்து வரியும், மற்ற வரிகளும் அதிக அளவில் நிலுவையில் உள்ளன. புதிய உள்ளாட்சி நிறுவன மன்றங்கள் இந்த நிலுவையிலுள்ள வரிகளை முறைப்படி வசூலித்து உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலையை உயர்த்த தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தற்போதைய சொத்துவரி, வீட்டுவாடகை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த முறையைப் பின்பற்றுவதில் பல குறைபாடுகள் உள்ளன. எனவே சொத்து வரி நிர்ணயிப்பது குறித்து புதிய முறைகளை வகுப்பதற்கு ஏற்ற கருத்துக்களை நகர்புற உள்ளாட்சி நிறுவனத் தலைவர்கள் வழங்கலாம்.

சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன் 1920-ஆம் ஆண்டு அனைத்து நகராட்சிகளுக்கும், 1971 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு தனித் தனியாகவும் சட்டங்கள் தயாரிக்கப்பட்டன. 1994-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளுக்கும், கோவை மாநகராட்சி சட்டப் பிரிவுகள் பொருந்தும் என்று மூன்று தனிச் சட்டங்களும் வெளியிடப்பட்டன. எனவே நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தற்போது ஏழு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இச் சட்டங்களின் மூல ஆதாரச் சட்டமாகிய சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதால், தற்போதுள்ள சூழ்நிலைக்கு, சில சட்டப்பிரிவுகள் பொருந் தாமல் உள்ளன. அவைகளை நீக்கி, சில புதிய சட்டப் பிரிவுகள் கொண்டு வரவேண்டியுள்ளது.

இவ்வாறு ஏழு சட்டங்களுக்கும் திருத் தங்கள் செய்வதற்குப் பதிலாக, அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்குப் பொருந்தும் வகையில், கேரள மாநிலத்தில் உள்ளது போன்ற ஒரு பொதுவான சட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இந்த வரைவுச் சட்டம் தயாரிக் கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வரைவு சட்டத்தின் நகல்களின் பேரில் பொதுமக்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெற உரிய வழிவகை காணப்படும். பிற மாநிலங்களில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எவ்வாறு கூடுதல் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நேரில் பார்க்கச் செய்தும், தமிழ்நாடு மாநில நிதிக்குழு பரிந்துரைகளின் அடிப்படையிலும், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் உரிமைகள் வழங்குவதற்கு புதிய சட்டத்தில் சட்டப் பிரிவுகளைச் சேர்த்து, வருகின்ற சட்டமன்ற வரவு செலவுக் கூட்டத் தொடரில் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனப் பணியாளர் களுக்கு நிர்வாகத்தைப் பற்றி பயிற்சி அளிக்க கோயம்புத்தூரில் ஒரு பயிற்சி நிலையம்

உள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தில் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி நிறுவன உறுப்பினர் மற்றும் தலைவர்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வசதியாக பயிற்சி கொடுக்கலாம் என்று கருதப்படுகிறது. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சுமார் 15,000 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளதால் இவர்களுக்கு கோயம்புத்தூரில் உள்ள பயிற்சி நிலையத்தில் மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமென்றால் ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்கு மேலாகிவிடும்.

எனவே பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மாவட்டத் தலைநகரிலும், சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலகங்களிலும் தனித்தனியாக பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தந்த நிர்வாகத் துறை அலுவலர்களும், கோயம்புத்தூர் நகர்ப்புற நிர்வாகப் பயிற்சி நிலைய அலுவலர்களும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று பயிற்சி அளிக்க, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. என்னென்ன பொருள்கள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டுமென்பதைக் கோயம்புத்தூர் பயிற்சி நிலையம் தயாரித்து அதன் அடிப்படையில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளிப்பது தவிர, பெண் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் முதல் முறையாக பெருமளவில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதால், அவர்களுக்குத் தனியாக ஒரு பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. பயிற்சிக்காக மட்டும் அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர், நல்ல சாலை வசதி, போதிய தெரு விளக்குகள், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் அவர்களது உறைவிடத்தில் கிடைக்க வேண்டும் என்பதே கிராமப்புறங்களில் உள்ள சராசரி குடிமக்களின் எதிர்பார்ப்பாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகிய நீங்கள், இந்த அடிப்படை வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்க உங்களது சீரிய கவனத்தைச் செலுத்துவீர்கள் என்று நான் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்ற கடந்த சில ஆண்டுகளில் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிட்டதாக காட்டப்பட்டபோதிலும், உண்மையில், அடிப் படை வசதிகளை செய்து கொடுப்பதில் மிகப் பெரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை நாம் எல்லோரும் நன்கறிவோம்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற மாநில மக்களின் விருப்பத்தை நிறைவுசெய்ய, மக்களின் பிரதிநிதிகளான உங்களுக்கு மேலும் அதிக உரிமைகளையும், நிதி ஒதுக்கீட்டையும் செய்ய வேண்டு மென்பதை இந்த அரசு நன்கு உணர்த்தி யுள்ளது. இதுபற்றிய தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் "மாநில நிதிக் குழு" தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு நேற்று (29.11.96) காலை தமிழக ஆளுநரிடம் வழங்கியுள்ளது. இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்களின் மூலம் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு, திட்டங்களை நிறைவேற்ற, உள்ளாட்சி அமைப்புகளுக்குப் படிப்படியாக கூடுதல் உரிமைகளையும் அதற்கொப்ப நிதி ஆதாரங்களையும் அரசு அளிக்கும்.

இந்த மாநாட்டில் அனுபவம் வாய்ந்த உள்ளாட்சி மன்றத் தலைவர்களும், அனுபவம் பெறவிருக்கும் உள்ளாட்சி மன்றத் தலைவர்களும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். மாநகரங்கள், நகரங்கள், பேரூர்- சிற்றூர்கள்- இங்கெல்லாம் வாழ்கின்ற மக்கள் இந்த அரசிடமும், உங்களிடமும் ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்ற- தொண்டுள்ளத் தோடு- நேர்மை, நாணயம் இவற்றை உயிரைவிட மேலாக மதிக்கும் தூய்மையான மனத்தோடு, இந்த மக்கள் பணியில் நம்மை நாமே ஒப்படைத்துக்கொள்ள வேண்டும். இந்த உணர்வைத் தான் உங்கள் ஒவ்வொருவரிட மிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன். என் எதிர்பார்ப்பும், மக்களுடைய எதிர்பார்ப்பும் ஏமாற்றத்திற்கு உள்ளாகாமல் சேர்ந்து பணியாற்ற வாரீர் என்று உங்களை எல்லாம் அழைக்கின்றேன்."

(30.11.1996)

# செய்திச்சரம்

## தமிழரசு அச்சகத்துக்கு நவீன பலவண்ண 'ஆப்செட்' அச்சு இயந்திரம்.

தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டு வரும் தமிழரசு இதழின் தரத்தை மேலும் மேம்படுத்தி நவீன முறையில் புதுப்பொலிவுடன் பல வண்ணங்களில் அச்சடிக்கவும், தற்பொழுது வெளியிடப்பட்டு வரும் பிரதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து வெளியிடவும், 'தமிழரசு' அச்சகத்திலுள்ள பழைய 'ஆப்செட்' அச்சு இயந்திரத்துக்குப் பதிலாக புதிய நவீன பலவண்ண 'வெப் ஆப்செட்' அச்சு இயந்திரம் (Web Offset Machine) மற்றும் அதன் தொடர்புடைய சாதனங்கள் வாங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ரூபாய் ஒரு கோடி அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

## வள்ளுவர் கோட்ட மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ள ரூ. 85 இலட்சம்

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்து புதிய பொலிவுடன் திகழ்வதற்கான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரூ. 84.94 இலட்சம் அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்தார்.

## ஜீவாவிற்கு நினைவகம்

அமரர் ஜீவானந்தம் அவர்களை நினைவுகூரும் வகையில் அன்னாருக்குக் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அரசு சார்பில் நினைவகம் அமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ரூபாய் 15.50 லட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

அமரர் ஜீவானந்தம் அவர்களின் நினைவு மண்டபம், நாகர்கோவிலுள்ள சி.பிராமசாமி பூங்காவின் மத்தியில் நூலகக் கட்டிடத்தின் முன் வெளியில் அமைக்கப்படும். நினைவு மண்டபத்தில், அமரர் ஜீவாவின் திருவுருவச் சிலை நிறுவப்படும். முழு மண்டபத்திலும் பளிங்குத்தரை அமைக்கப்படும்.

## திருமலை நாயக்கர் அரண்மனையைப் புதுப்பிக்க நிதி

மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனை நீண்டநாட்களாக, பராமரிப்பு செய்யப்படாமல் இருந்ததால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. திருமலை நாயக்கர் அரண்மனையின் தொன்மையைப் பாதுகாக்கவும், கட்டடத்திலுள்ள பழுதுகளைக் களையவும் அரசு ரூ.78.40 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இவ்வாண்டு, முதற்கட்டமாக ரூ.30 இலட்சத்திற்கு அரண்மனை கட்டடத்தின் பழுதுகளை நீக்கவும், தொன்மையைப் பாதுகாக்கவும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் எஞ்சியுள்ள பிற பணிகளைத் தாமதமின்றி வரும் நிதியாண்டிலேயே செயல்படுத்தி அரண்மனையின் தொன்மையையும், பெருமையையும் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும்படி தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் புதிய கூடம்

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் அரசு விழாக்கள், தனியார் திருமண நிகழ்ச்சிகள், மாநாட்டுக் கூட்டங்கள் முதலியன நடைபெற்று வருகின்றன.

இதன் வசதிகளை அதிகப்படுத்தினால் அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது என்பதனைக் கருத்தில்கொண்டு, கலைவாணர் அரங்க வளாகத்தின் தரைத்தளத்தில் வருவாயைப் பெருக்க அரசு முடிவு செய்துள்ளது. அக்கூடத்தில் ஒரே சமயத்தில் 300 பேர் அமர்ந்து உணவு உண்ண வசதியுள்ள உணவுக் கூடமும், நவீன வசதிகள் கூடிய சமையல் அறையும், முதல்தளத்தில் 5 தங்கும் அறைகளும் கட்டுவதற்கு மாண்புமிகு கலைஞர் அவர்கள் ரூ.90 லட்சம் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்.

# வெள்ளப் பகுதிகளில் முதல்வர் கலைஞர்: பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்


சென்னையில் தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக அனைத்துப் பகுதிகளும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளெல்லாம் நிரம்பி வழிகின்றன. இதனால், தாழ்வானப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.


புயல் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 12.12.96 அன்று நேரில் சென்று பார்வையிட்டார். முதலில் வட சென்னை பகுதியில் உள்ள கொருக்குப்பேட்டை, கொடுங்கையூர் ஆகிய பகுதிகளில் தேங்கிக் கிடந்த மழைநீரைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் படும் அவதியை நேரில் பார்த்தும் குறைகளைக் கேட்டறிந்தும் உரிய நடவடிக்கை எடுக்க உடன்வந்த உயர் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

தொடர்ந்து திருவொற்றியூர், மணலி, ஆர்.கே.நகர், எழில் நகர், பெரம்பூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் மழையினால் ஏற்பட்டப் பாதிப்புகளைப் பற்றிக் கேட்டறிந்தார். அந்தந்தப் பகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தண்ணீரில் நடந்து சென்றே பார்வையிட்டார்.

மேலும், இராமபுரம், காசிமேடு, சைதாப்பேட்டை, மறைமலை அடிகள் பாலத்திற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்குள்ளவர்களின் குறைகளையும் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு உணவும் தங்குவதற்கு வேறிடம் தரவும் அலுவலர்களுக்கு ஆணையிட்டார். முப்படை வீரர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். இப்பகுதிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அலுவலர்கள் உடன் சென்றனர்.

இந்த மழை வெள்ளத்தால் 40-க்கும் மேலானோர் உயிரிழந்துள்ளனர். துயர் துடைப்புப்பணிகளுக்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு முதல்வர் பெரும் நிதி உதவுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கும் எழுதியுள்ளார்.





# தென்னக இரயில்வே

## சென்னை

**வேலைவாய்ப்பு அறிவிக்கை எண் : 06/96-97**

**விண்ணப்பம் வந்து சேர வேண்டிய நாள் : 14.1.97**

பதவி எண் : 36

**விசாரணை மற்றும் பதிவு எழுத்தர்**
(ENQUIRY CUM RESERVATION CLERK)

**சம்பளம் :** ரூ. 1200 - 2040.

**வயது :** 18-30

**காலியிடங்கள் :** 30
(ஆதிதிராவிடர் 5, பழங்குடியினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 8, பொது 16)

**பயிற்சி காலம் :** 3 மாதங்கள்

**உதவித் தொகை :** ரூ. 1200 + இதரப்படிகள்

**கல்வித்தகுதி :**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான படிப்பு

பதவி எண் 37 :

**கைவினைஞர் (எந்திரப் பொறியியல்)**
(SKILLED ARTISAN (MECHANICAL)

**சம்பளம் :** ரூ. 950-1500

**வயது :** 18-30 வரை

**காலியிடங்கள் :** 20
(ஆதிதிராவிடர் 3, பழங்குடியினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5, பொது 11)

**கல்வித் தகுதி :**
10 ஆம் வகுப்பு அல்லது பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு சமமான வகுப்பு அல்லது அப்ரண்டிசிப்பயிற்சி முடித்திருக்க வேண்டும் அல்லது தொழிற் பயிற்சிநிலையத்திலும் (I.T.I) படிப்பில் தேர்ச்சி

1. ஆட்டோமோபைல் எந்திரவியல் 2. டீசல் ஏந்திரவியல் 3. டிராக்டர் எந்திரவியல் 4. ஃபிட்டர் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதவி எண் 38 :

**கைவினைஞர் (மின்னியல்)**
(SKILLED ARTISAN (ELECTRICAL)

**சம்பளம் :** ரூ. 950-1500

**வயது :** 18-30 வரை

**காலியிடங்கள் :**
20 (ஆதிதிராவிடர் 3, பழங்குடியினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5, பொது 11)

**கல்வித் தகுதி :**
10 ஆம் வகுப்பு அல்லது பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு சமமான வகுப்பு அல்லது அப்ரண்டிசிப் பயிற்சி முடித்திருக்க வேண்டும் அல்லது தொழிற் பயிற்சி நிலையத்திலும் (I.T.I) ஏதாவது ஒரு தொழில் படிப்பில் தேர்ச்சி.

1. மின்னணுவியல், 2. மின்சாரப் பொறியியல், 3. மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல், 4. எலக்ட்ரிசியன், 5. ஒயர் மேன், 6. லைன்மேன், 7. காய்ல்வைண்டிங்.

குறிப்பு :

(அ) பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு 3 ஆண்டு பயிற்சியும்போது உதவித் தொகையாக ரூ. 900-940 வழங்கப்படும்.

(ஆ) தொழிற்பயிற்சி நிலையத்தில் வேலைக்குத் தொடர்பு உள்ள பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 6 மாதங்கள் பயிற்சியும் பயிற்சி காலத்தில் ரூ. 950 உதவித்தொகையும் வழங்கப்படும்.

(இ) தொழிற்பயிற்சி நிலையததில் மற்றப் பிரிவுகளில் தேர்ச்சிப் பெற்றோருக்கு 1 ஆண்டு பயிற்சியும் பயிற்சிக் காலத்தில் ரூ. 950 உதவித்தொகை வழங்கப்படும்.

ரயில்வே அல்லாத பிற நிறுவனங்களில் எந்த வேலைக்கு விண்ணப்பிக்கிறாரோ அதே பிரிவில் பயிற்சிப்பெற்று அப்ரண்டிஷிப் தேர்வு பெற்றிருப்பின் அவர்களுக்கு 6 மாதங்கள் பயிற்சியும், பயிற்சிக்காலத்தில் ரூ. 950 உதவித்தொகை அளிக்கப்படும்.

(உ) ரெயில்வே நிர்வாகத்தில் எந்த வேலைக்கு விண்ணப் பிக்கிறாரோ அதே வேலையில் அனுபவம் பெற்றிருந் தால் அவர்களுக்கு பயிற்சித் தேவையில்லை. ஆனால் இரயில்வேயில் மற்ற பிரிவில் அனுபவம் பெற்றிருந் தால் அவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியும், பயிற்சி காலத்தில் உதவித்தொகையாக ரூ. 950/- வழங்கப்படும்.

**நிபந்தனைகள் :**

1. 14.1.77க்கு முன்னதாக அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் அல்லது கல்வி நிறுவனங்களில் படிப்பை முடித்திருக்க வேண்டும்.
2. நேர்க்கானலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இரயில்வே நிர்வாகத்தால் நடத்தப்படும் மருத்துவப்பரிசோதனைகளில் தேர்ச்சிப்பெற வேண்டும்.
3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் பற்றிய தகவல்கள், நிபந்தனைகள் யாவும் இரயில்வே நிர்வாகத்தின் சட்ட, திட்டங்களுக்கு உட்பட்டது. அவைகளை மாற்றவோ, திருத்தி அமைக்கவோ, இரயில்வே நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
4. நடப்பிலுள்ள அரசு விதிகளின் படி வயது வரம்புகள் தகுதியுடையோர்க்கு தளர்த்தப்படும்.
5. எழுத்துத்தேர்வு மற்றும் நேர்க்காணல் தேர்வுகள் ஆங்கிலம் அல்லது இந்தி மொழியில் நடக்கும் அதற்கான விருப்பத்தை முன்கூட்டியே விண்ணப்பதாரர்கள் தெரிவிக்க வேண்டும்.

**தேர்வு மையங்கள் :**
பொதுவாக தேர்வுகள் சென்னை மையத்தில் நடைபெறும். தேவைப்பட்டால்கூடுதலாக திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மையங்களில் தேர்வுகள் நடத்தப்படலாம்.

**பயணக்கட்டணம்:**
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டும் தேர்வுமையங்களுக்குச் சென்றுவர இலவச பயண அட்டைகள் அளிக்கப்படும். இந்தச் சலுகை மற்றவர்களுக்குக்கிடையாது.

**புகைப்படம் :**
விண்ணப்பதாரர்கள் அன்மையில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டவேண்டும். புகைப்படத்தில் கையெழுத்திட்டிருக்க வேண்டும். இதுதவிர மற்றொரு அதே அளவிலான புகைப்படத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

**தேர்வுக் கட்டணம் :**
ஆதிதிராவிடர், பழங்குடியினர் முன்னாள் இராணுவத்தினர் இவர்களுக்குத் தேர்வுக்கட்டணம் இல்லை. மற்றவர்களுக்குக் கட்டணம் கீழேகண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவி எண் : 36க்கு தேர்வு கட்டணம் ரூ. 30 (முப்பது ரூபாய்) மட்டும்.

பதவி எண் : 37 மற்றும் 38க்கு தேர்வுக் கட்டணம் ரூ. 20 (இருபது ரூபாய் ) மட்டும்.

14.12.96க்கு பிறகு வாங்கப்பட்ட அஞ்சல் ஆணையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியை தெளிவாக எழுதப்படவேண்டும்.

**Member Secretary,**
Railway Recruitment Board,
Chennai - 600 086.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் வயது, கல்வித்தகுதி, சாதி போன்ற சான்றிதழ்களின் நகல்களை இணைத்து 14.1.97க்குள்

**Member Secretary,** Railway Recruitment Board,
Poes Garden, (Binny Road), Off Cathedral Road,
Chennai - 600 086.
அனுப்பவேண்டும்.

என்ற முகவரி எழுதப்பட்டு 14.1.97க்குள் மேற்கண்ட முகவரிக்கு சாதாரணதபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

தபால் உறையில் வேலைவாய்ப்பு அறிவிக்கை எண்பதி எண், பதவியின் பெயர் போன்றவற்றை தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள விரும்புவோர் **Employment News Weekly 7-13 December 1996** இதழைப் பார்க்கவும்.

## மாதிரிவிண்ணப்பம்

## APPLICATION PROFORMAE FOR NON EX-SERVICEMEN AND EX-SERVICEMEN CANDIDATES

RAILWAY RECRUITMENT BOARD, CHENNAI - 86
APPLICATION FORMAT FOR CANDIDATES (Except Ex-Servicemen)
(To be filled in English or Hindi by all candidates in their OWN HANDWRITING)

To
The Chairman,
Railway Recruitment Board,
Chennai- 86.

(For Office Use Only)
Serial No. :..........................
Roll No. :............................

I hereby apply for recruitment of the following posts in Railways in response to Employment Notice No.6\96-97.

CATERGORY NO:

NAME OF THE POST :

Affix here a signed copy of your recent passport size photograph

INDIAN POSTAL ORDER DETAILS (EXAMINATION FEES)

| | Name of the Post Office | Sl.No. of Postal Order | Date of the Postal Order | Amount Rs. P. |
|---|---|---|---|---|
| a. | | | | |
| b. | | | | |

Note: SC\ST candidates are exempted from examination fees. If exemption is claimed. Write Exempted being SC\ST.

CHOICE OF EXAMINATION CENTRE (Pl.Tick ( ) the preference)

| CHENNAI | THIRUCHIRAPPALLI | MADURAI |
|---|---|---|
| 1 | 2 | 3 |

1. NAME OF THE CANDIDATE (IN BLOCK LETTERS)
2. FATHER'S \ HUSBAND'S NAME

RAILWAY RECRUITMENT BOARD, CHENNAI - 86
APPLICATION FORMAT FOR EX-SERVICEMEN
(To be filled in English or Hindi by all candidates in their OWN HANDWRITING)

To
The Chairman,
Railway Recruitment Board,
Chennai- 86.

(For Office Use Only)
Serial No. :..........................
Roll No. :............................

I hereby apply for recruitment of the following posts in Railways in response to Employment Notice No.6\96-97.

CATERGORY NO:

NAME OF THE POST :

Affix here a signed copy of your recent passport size photograph

CHOICE OF EXAMINATION CENTRE [Pl.Tick ( ) the preference]

| CHENNAI | THIRUCHIRAPPALLI | MADURAI |
|---|---|---|
| 1 | 2 | 3 |

1. Personal No. Rank & Name :..............................
2. Arm of Service :..............................
3. Father's Name :..............................
4. Date of
   (a) Birth :..............................
   (b) Enrolment :..............................
   (c) Attestation :..............................
   (d) Retirement/Discharge
   (e) Community Code (1-sc,2ST, 4-OBC, 5-Others) :..............................
5. Reasons for Release / Discharge :..............................
6. Medical Category :..............................
7. Award of Decoration

3. ADDRESS FOR COMMUNICATION

PINCODE

4. DATE OF BIRTH
DATE MONTH YEAR

5. SEX Male Female
Indicate by tick mark

6.NATIONALITY

7. RELIGION

8.MOTHER'S TONGUE

9.MEDIUM FOR EXAM (Indicate for tick mark) ENGLISH HINDI

10. a) COMMUNITY CODE :
b) CLASSIFICATION CODE
(Only if applicable )
(Please see item No.16 for Code Numbers)

11. NEAREST RAILWAY STATION
(Only for SC\ST Candidates)
a) Nearest Railway Junction ..............................................
b) Nearest Zonal Railway :..............................................

12. If you are a Railway Employees. State
a) Name of the post \holding :..............................................
b) Name of the Dept\Office :..............................................
c) Period of Service From..................To................
(Documentary proof to be attached)

13. EDUCATIONAL QUALIFICATION [Documentary Proof to be attached]

| Sl No. | Name of the Board /University | Examination | Authority which has recognised | Subject | Year | Class/ Division | Aggregate/ % of Marks |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |

14. DOCUMENTS ATTACHED
1. ..................................................... 3. .....................................................
2. ..................................................... 4. .....................................................

15. DECLARATION:
I hereby declare that i have carefully read the conditions of eligibility advertised and that I satisfy them. All the statements
made in this application are true. Complete and correct to the best of my knowledge and belief. I also undertake to produce the origional certificates in support of my above claim. Whenever required. I understand that in the event of any particulars or information given herein being found false and / or incorrect of if I am defected to be ineligible at any stage of the selection process my candidates for the examination/interview/selection/appointment is liable to be rejected or cancelled and in the event of any misstatement/ discrepancy in the particulars being detected after my appointment, my services are liable to be terminated without notice to me.

Place: Signature of the applicant

Date:

16. COMMUNITY CODE SC-1, ST-2, OBC-4 OTHERS-5
CLASSIFICATION CODE SRE-6 DW/ W-7 AR-8 DG-9 K-10.

Mother Tongue ..............................................

8. Postal Address for Communication (address where the candidate is likely to stay normally.) Pincode..............................

9. (a) Nearest Railway Station :..............................
(b) Nearest Railway Junction :..............................
(c) Nearest Zonal Railway :..............................

10.Present Profession/Employment (complete details) :..............................

11.Whether SC/ST/OBC (Indicate Sub-caste/Religion) :..............................

12. Educational Qualification (Documentary proof to be attached) Civil Equivelent
(a) Civil (education) :..............................
(b) Millitary (Education) :..............................
(c) Military (Professional) :..............................

13.Languages Known :..............................
To Read To Write To Speak
(a) Indian :..............................
(b) Foreign :..............................

14. Extra curricular activities
(a) Sports :..............................
(b) Literary :..............................
(c) Cultural/ Art :..............................

15. Details of Pay/Pension/Gratuity :..............................
(a) Last basic pay drawn :..............................
(b) Total Emoluments :..............................
(c) Details of Pension/Gratuity :..............................

16.Zilla Sainik Board :..............................
Employment Exchange :..............................
Registration No. :..............................

17. Character as assessed by Millitary Authorities (counter signed) (Applicable where applications are not made directly) :..............................

18. List of enclosures (a).................. (b).................. (c)..................
(d).................. (e).................. (f)..................

19. Medium of question paper the candidate would like to choose in the written examination
English Hindi

(please tick mark ( ) the appropriate box

DECLARATION;
I hereby declare that I have carefully read the conditions of eligibility advertised and that I satisfy them. All the statements made in the application are true. Complete and correct to the best of my Knowledge and belief. I also Undertake To produce the origional certificates in support of my above claim. whenever required i understand that in the event of any particulars or information given herein being found false and / or incorrect or if I am detected to be ineligible at any stage of the selection process my candidature for the examination/Interview/selection/appointment is liable to be rejected or cancelled and in the event of any misstatement/discrepancy in the particulars being detected after my appointment, my services are liable to be terminated without notice to me.

Place:
Date: Signature of the Applicant.

## அட்டைப் பட விளக்கம்

**முதல் அட்டை:**

புதிய தமிழக ஆளுநரை- முதல்வர் வரவேற்றல்.

**இரண்டாம் அட்டை:**

ஐதராபாத்தில், மறைந்த முன்னாள் ஆளுநர் உடல்மீது- முதல்வர் மலர் வளையம் வைத்தல்.

**கடைசிப்பக்க அட்டை:**

சென்னையில் நடைபெற்ற, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் முதல் சிறப்பு மாநாடு.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர்: இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமுதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜியாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# ஆசிரியர் மடல்

மேதகு தமிழக ஆளுநராக இருந்த டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் 2.12.1996 அன்று காலை ஐதராபாத்தில் மாரடைப்பால் காலமானார்.

ஆந்திரத்திலும், மத்திய அரசிலும் அமைச்சராகப் பொறுப்பேற்றும், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மேதகு ஆளுநராக இருந்தும் நல்லனுபவம் பெற்றிருந்த அவர், 1993ல் தமிழ்நாட்டு ஆளுநராக நியமிக்கப்பட்டார். அரசியலில் பல்வேறு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் ஆளானாலும்கூட எப்போதும் பழக இனியவராகவும், பார்க்க எளியவராகவும், நிர்வாகத் திறன் மிக்கவராகவும் விளங்கியவர் அவர்.

புதிய அரசு மலர்ந்தபின் மேதகு சென்னாரெட்டி அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே- 'சென்னை ரெட்டி' என்று குறிப்பிடும் அளவிற்குப் பெருமைபெற்றார். அப்படிப்பட்டவர் மறைவை ஆற்றொணாது, மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், ஐதராபாத்திற்கே சென்று மலர்வளையம் வைத்துக் கண்ணீரஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாடு அமைச்சரவை, சிறப்புக் கூட்டம் நடத்தி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தது அரசு ஒருவார காலம் துக்கம் கடைப்பிடித்தது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும்கூட அன்னாரின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தியுள்ளன.

அரசு நடத்திய அனைத்துக்கட்சி நினைவஞ்சலி கூட்டத்தில் பேசிய மாண்புமிகு முதல்வர்- ஆளுநர் சென்னாரெட்டி அவர்களுக்குச் சென்னையில் நினைவாலயம் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

1956ல் இங்கே ஆளுநராக இருந்த திரு ஏ.ஜே.ஜான் அவர்கள் மறைந்தபோது, சென்னையில் இறுதிச் சடங்கு நடைபெற்றது. ரெட்டி அவர்களுக்குத்தான் ஆந்திரத்தில் நடத்தப்பட்டுள்ளது. மனிதாபிமானமிக்க மாமனிதரின் பிறப்பும் இறப்பும் எங்கே சம்பவித்தால் என்ன?

ஆளுநர் ரெட்டியார் அவர்களின் குடும்பத்தார்க்கு, நாமும் நம் வருத்தத்தைத் தெரிவிப்போம்.

– ஆசிரியர்




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி




தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



